1271

ஜகன்மோகினி

JAGANMOHINI

—2— 59

25 நயா பைசா

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 MAR 1959
MADRAS



N59:36:2
183228

ஜகன்மோகினி

ஐயுணர்வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து.
—வீரராகவ கவி

பிப்ரவரி 1959. மலர் 36, இதழ் 2. விளம்பி ஸு தை மீ

விஷய அட்டவணை

நாகபுரி காங்கிரசும் பாதயாத்திரையும் —வி. கே. பார்த்தசாரதி 1

உள்ளம் கவர்ந்த ஊர்கள் அஜந்தா, எல்லோரா —டி. ஸ். ராஜகோபாலன் 6

மதிப்புரை 10

சங்கங்களின் சேவை ஸ்ரீநிவாஸ காந்தி நிலையம் —வசுமதி ராமசுவாமி 11

பின்னணி இசைமண்டலம் சீர்காழி கோவிந்தராஜன் —பி. வி. ஜயராமன் 14

அன்பு அருவி (தொடர் கதை) —விஜயலக்ஷ்மி வரதராஜன் 17

கப்பரை காசு —உண்மை விளம்பி 23

ஸம்சார சக்கரம் —ஜயலக்ஷ்மி ஸ்ரீநிவாஸன் 25

மூவாயிரம் ரூபாய் செக் —டி.ஸி.கே. மல்லிகை சுந்தரம் 27

காளிதாசர் கனவு —கே.எஸ். ராமஸ்வாமி சாஸ்த்திரி 32

பொருட்காட்சி சாலை 34

வ்ருதாதிகளின் மகிமை —ஏ. சரோஜாபாய் 36

குளிர்ந்த நெஞ்சம் (தொடர் கதை) —வை. மு. கோ. [13—24]

சாரநாத் தொல்பொருள்

பொருட்காட்சிச்சாலை

இந்தியாவிலுள்ள மிகப் பழமையான பொருட்காட்சிசாலைகளில் சாரநாத் தொல்பொருள் பொருட்காட்சிசாலையானது நமது தேசியச் சின்னமாக விளங்குகிற பிரசித்தி பெற்ற சிங்க உருவத்தைத் தந்த சிறப்பைப் பெற்றிருக்கிறது.

கி. மு. 3-வது நூற்றுண்டிலிருந்து கி. பி. 16-வது நூற்றுண்டு வரையுள்ள காலத்தைச் சேர்ந்த சுமார் 10,000-க்கும் அதிகமான தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த அரிய பொருள் அப்பொருட்காட்சிசாலையில் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. அவைகளில் அபூர்வ சிற்ப வேலைப்பாடமைந்த உளிகள், தூண்கள், தேவதைகளின் சிலைகள் முதலியவை அடங்கியுள்ளன. இந்திய வாழ்க்கையிலும் கலைத்துறையிலும் புத்தரின் வாழ்க்கையும் போதனைகளும் எவ்வளவு தூரம்

நாகபுரி காங்கிரசும்-பாதயாத்திரை

ஸ்ரீ வி. கே. பார்த்தசாரதி அய்யங்கார், பி.ஏ., பி.எல்.,

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!—எங்கள் நாடும் செழுத்திட விளங்குக!—எங்கள் குலமும் நிலைத்திட ஓங்குக!—நாமும் யாவரும் நலமுடன் வாழ்க!

> "கூடாரை வெல்லும்சீர்க் கோவிந்தா உன்றன்னைப்
> பாடிப் பறைகொண்டு யாம்பெறு சம்மானம்
> நாடு புகழும் பரிசினுல் நன்ருக
> சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
> பாடகமே யென்றனைய பல்கலனும் யாமணிவோம்
> ஆடை யுடுப்போ மதன்பின்னே பாற்சோறு
> மூட நெய்பெய்து முழங்கை வழிவார
> கூடி யிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்"

பொங்கும் பாலும், விளையும் பயிர்களும் இனியாவது கிடைக்க வேண்டும் எனக் கோரிப் பொங்கல் பண்டிகை முடித்தோம். நமது காங்கிரஸ் இன்றைக்கு, இருபதாண்டு பின்னராவது பயிர் நில விளைவுகளும், தொழிற்சாலை விளைவுகளும் இருமடங்கதிகரிக்கக் கோரி, அறுபத்திநாலாம் மகாநாட்டில் தீர்மானங்கள் செய்து முடித்தது. மக்களின் கடமைகளை நினைப்பூட்டி வற்புறுத்தவும், மூன்ரும் ஐந்தாண்டுத் திட்டத்தை முற்றுவிக்கவும், ஜனவரி 30 முதல் பிப்ரவரி 4 வரை காங்கிரஸ் தொண்டர்கள் பாத யாத்திரை விரதம் ஏற்றுள்ளனர். காங்கிரஸ் கக்ஷியார், மாவட்ட, பிரதேச கிராமக் குழுக்களாகக் கூடி, கிராமத்திற்குக் கிராமம் நடந்து சென்று, சீர்திருத்தத்திற்கான தீர்மானங்களை விளக்கி, கூட்டுறவு பஞ்சாயத்துச் சாகுபடிப் பெருமையைப் பிரசுரித்து, ஜனப்பெருக்கு குறைக்கவும் விளைவு பெருக்கு அதிகரிக்கவும், வேண்டிய எருக்களைப் பொருக்கவும், மக்களுக்கு அவரது கடமைகளைச் சொல்லிக்கொடுத்து, ரிபோர்ட்டுகள் கோர்த்துப் பரிசிலனை பண்ணி, கமிட்டிகள் கூடி, தீர்மானங்கள் நிறைவேற்றப் போகிருர்கள். 'நாளைக்கு வாழ்க்கைப் படுகிறேன்—கழுத்தே சும்மாயிரு' என்ற கதையாயிருக்கிறது. இருபது வருஷம் கழித்து பின்னர் நமக்குச் சுகம் விளைய, இன்றைய வருந்தும் மக்களுக்குக்காங்கிரஸார் திட்டம் வகுப்பது! அரசு கெட்டதே யென்ற பெருங் கூச்சலை அடக்க, மக்களது கடமை உணர்த்தும் பாதயாத்திரையாம்! அரசுக்குக் கடமைகள் இடையாது போலும்!

காங்கிரஸ் கடமை இப்படிப் பாதயாத்திரையாய்ப் போய்க் கொண்டிருக்க, 'நாமே தமிழர்' என்ற காக்ஷி திருநெல்வேலியிலிருந்து பாதயாத்திரை புறப்பட்டு வருகிறது. திருநெல்வேலி ஆதித்யன் கீழ் மகாநாடு கூட்டி, ஈ. வெ. ராவின் ஆசிகள் ஏற்று தமிழ்நாடு என்பதைத் தனித்து எடுத்துக்காட்டாத இந்தியப் படங்கள் யாவற்றையும் எரித்தொழிக்க தீர்மானித்து, அந்தப் புனித கைங்கர்யத்தைப் பிரசாரத்தோடு விடாது, தமது சுதர்ம

1-2-59.

அனுஷ்டிக்கவும் போகிறார்களாம், இந்தத் தமிழ்நாட்டு மிழர்.

பச்சும் அனுஷ்டானமும்!

காங்கிரஸில் பேச்சும் அனுஷ்டானமும் பிரசாரமெல்லாம் பேச்சளவாகவே நின்று விடுகிறது. அனுஷ்டானத்திற்கு கொணரக்கூடிய தீர்மானம் எதையும் காணோம்; தீர்மானங்களை அனுஷ்டித்துக் காட்டும் இஷ்டமோ, திறனோ கொண்டவர்கள் முன்வருவதையும் காணோம்; தமது தீர்மானங்களின் அர்த்தமும் விளைவும் அக்கக்ஷிக்காரர்களுக்கே இன்னமும் தெளிவாக விளங்கியதாகவும் காணோம். ஆனால், குடிமக்கள் மட்டு தொகையில் பெருகாது, தினமும் பெருகும் கஷ்டங்களைப் பாராட்டாது, அரசாங்கம் மேலும் பெருகிச் சுமத்தும் சுமைகளையும் பழிகளையும் வெளியிடாது ஒத்துழைத்துப் போக வேண்டுமாம். இதுவே இரண்டாம் ஐந்தாண்டு திட்டம் இனிது முடிந்து, மூன்றும் ஐந்தாண்டு திட்டம் சுபமாக ஆரம்பிக்க காங்கிரஸ் கக்ஷியார் நாகபுரியில் கூடிப் பாதயாத்திரை செய்து பிரசுரிக்கத் தீர்மானித்த மக்கள் கடமைகளின் சாராம்சம்.

சுதந்திரம் பெற்றவுடன், சமதர்ம சமுதாயம் ஏற்படுத்துவதே காங்கிரஸ் ஆட்சியாளர் நோக்கமென உறுதிகொண்ட காங்கிரஸ், இன்று நாகபுரியில், அந்நோக்கத்தைக் கைவிட்டு, 'குடியரசுச் சோஷலிஸம்' என்ற நோக்கத்தை ஏற்றுக்கொண்டு, சமதர்ம கூட்டுறவு குடியரசு ஸ்தாபிக்கப் போவதாகச் சொல்லிவிட்டது. சமூகத்தில் தர்கங்களை நீக்கிச் சமமாக்கி முடித்தாகிவிட்டதுபோலும்! இனி அரசியல் தர்மத்தைச் சமமாக்க நோக்கம் எழுந்துள்ளது போலும். சமதர்மம், சோஷலிஸம், கூட்டுறவு, பண்ணை, குடியரசு சோஷலிஸம் என்றெல்லாம் பேருக்குப் பேராக பெரிய வார்த்தைகளாகப் பேசுகிறார்களே யொழிய, பேசிய வார்த்தைகளின் தத்வமோ, தாத்பர்யமோ பேசியவர்களுக்கோ, தீர்மானம் நிறைவேற்றிய கக்ஷிக்கோ தெளிவாகவில்லை யென்பதை, இதுபற்றிப் பேசியவர்களே வெளிப்படுத்திவிட்டனர். பொதுநலனே பொது நோக்கமாகக் கொண்டு திட்டங்கள் வகுத்தாலல்லவா, நோக்கு விளங்கும். அவரவர், தத்தம் பெருமைக்கும், பதவிக்கும், சுயம்ப்ரயோஜனத்திற்குமாகத் திட்டங்கள் நினைத்துப் பேசினால், பொது நோக்கம் எப்படி ஏற்படும்?...

நிர்வாக இயந்திரத்தில் தோன்றியுள்ள கணக்கற்ற களங்கங்களைக் களைந்தெரிந்து, நிர்வாகத் திறன் புகுத்தவே முயற்சிகள் நடக்கப் போகின்றனவாம். இதுவரை, திறனின்றியும், பொதுநல நோக்கமின்றியும், ஊழல் நிறைந்திட வசதிகள் தந்தும் நிர்வாகம் நடத்தியதானது, இப்பொழுதாவது தெரிய வந்து, பகிரங்கப்படுத்தப்பட்ட வரையில் நாம் அல்ப சந்தோஷம் கொள்ள வேண்டியதுதான்.

நீதிமன்றங்களின் தற்கால நிலை!

கடமைகளை யாவரும் அலக்ஷியம் செய்கிறார்களாம். நீதிமன்றங்களில் சட்டம் சமநீதியில் வழங்கப்படுவதில்லையாம்.

18322

நிர்வாகிகள் ஆக்ரோஷம் நீதிபதிகள் மீது பாய்வதாம். வெள்ளையர் வகுத்துவைத்த நீதி நெறி, நிர்வாகிகள் அதிக… திற்கு அப்புறத்தாகி, நேர்மையுடன் வினங்கி வந்தது. சுத… திரம் வந்தது முதல், அந்நெறி மாறிப்போவதைக் கண்டு மக்கள் மனம் புழுங்கினோம். நீதிமன்றங்களும் நிர்வாகிகள் முகம் நோக்கிப் போவது போலுள்ளதேயென எண்ணியிருந்தோம். இனி, இதையும் தேசிய பக்திப் போட்டியாளர் கைக்கருவியாக ஒப்புவித்துவிட்டால், நாட்டில் அவசர சட்டங்களும், ஆளைப் பொறுத்த நீதி வாதங்களும், அதிகாரி முகம் நோக்கிய தர்மமுந் தான் வளரும்படி வரும். உயர்தர நீதிமன்றங்களாவது இத்தகைய நிர்வாக அதிகார அதீதமாயிருக்க முடியாதோயென நாம் ஏங்கும் வேளையில், நிர்வாக அதிகார வசப்படும் நீதி வழங்கு முறைகளை, ஒய்வுபெறும் நீதிபதிகளுக்கு, மீண்டும் பதவிப் போட்டிக்குப் போராடும் வசதிகள் கொடுத்துப் போவதால், நீதிமன்றச் சுதந்திரமும் இழந்து, ஆட்சி சுதந்தரம் பெற்றும் அரசு சுதந்தரம் பெருத குடியரசு மக்களாய் நாம் பரதவிப்பது போல, நீதிமன்றங்களும் சுவாதீனமற்ற சுயேச்சாக் கருவிகள்ளாகவே குழப்பங்கள் கொடுப்பதேயாகும். இதுதான் காங்கிரஸ் இனித் தீர்மானித்த குடியரசு சோஷலிஸமோ?—

சகலத்தையும் தேசிய மயமாக்குவதா?

பொதுப்பட்டார் ஸ்தாபனங்களைத் தேசியமாக்கிப் பெருக்கவே இனி, அரசாங்கம் முயற்சிக்கப் போகிறதாம். தனிப்பட்டார், தம் சலுகைகளைத் தியாகம் செய்ய வேண்டுமாம். யாவற்றுவித முக்யமான தொழில் முறைகளையும் அரசாங்கமே ஏற்று நடத்தப் போகிறதாம். உண்மைக் குடியரசு சோஷலிஸம் இதுதான் போலும்!—அரசாங்கத்தின் தொழில் அரசு செலுத்துவதா?—வியாபாரம் செய்வதா?—ஆங்கிலர், வியாபாரத்திற்காக இந்தியாவில் அடிவைத்து, அரசாங்கத்தை ஆக்ரமித்தனர். சுதந்திர இந்தியரோ சுதந்திர அரசியல் பொறுப்பு ஏற்றவர், சுயலாப வியர்பாரஞ் செய்ய முன்வருகிறார்கள். ஆங்கிலரை வெளியேற்றிய கதவு, இன்னமும் அடைக்கப்படவில்லை. அவர்களை வெளியேற்ற ஒன்றுகூடியிருந்த சுதந்திர இந்தியராகிய நாம், அவர்கள் அகன்றதும் பல கக்ஷிகளாகப் பிரிந்து, சுதர்மம் விட்டு, கலகங்கள் பெருக்கி, அத் திறந்த வழி நோக்கியே போட்டி போட்டு விரைகிறோமே!—

ச்ரேயான் ஸ்வதர்மோ விகுண: பரதர்மாத்
ஸ்வனுஷ்டிதாத்
ஸ்வபாவநியதம் கர்ம குர்வந்நாப்நோதி கில்பிஷம்
(கீதை 18.47)

சுதர்மம் அனுஷ்டியாது பரதர்ம மோகமாயிருப்போர் அதர்மிஷ்டர்களே. அதர்மிஷ்டர்களை அழித்து, சுதர்மம் செய்திடச் சமூகத்தாரை உந்துவதே நல்லரசின் சுதர்மமாகும். நாட்டைக் காத்திட வேண்டிய சுதர்மத்தை விட்டு, வியாபாரத் துறைகளில் கவனம் செலுத்துவதிலும், தெய்வீக உணர்ச்சிகளைக் கண்டிப்

..., அரசு பிரவர்த்தித்தால், அரசின் கடமையை யார் ...து? அந் நிலையில், நம் நாடு, அரசற்றதாகிக் கலகமும் ...ப்பமும் நிறைந்ததேயன்றோ ஆகக்கூடும்!

கல்வி நிலை இனி என்ன?

அபயங்கார் நகர் பெருத்த செலவில் நிர்மாணிக்கப்பட்டாலும், அதில் நடந்த காங்கிரஸ் கூட்டம்மட்டும் வெகு சுருக்கமாகவும், பரபரப்பின்றியுமே கண்காக்ஷிகளுடனும், கலாசாரக் கூட்டங்களுடனும் முடிந்தது. அரசியல் பொருளாதார சமூக நெருக்கடிகளுடன், கலாசாரத் தலையெடுப்பு கைகோர்த்து நடனமாடுவதுதான் நவீன நாகரீகமாகிவிட்டது. எந்த மகாநாடாயினும், பொதுக் கூட்டமாயினும், காங்கிரசாயினும், கலாசார நிகழ்ச்சிகளோ, கண்காக்ஷிகளோ, இன்றி நடப்பதாகக்காணோம். ஆனால் உண்மைக் கலையோ, ஆசாரமோ யாதென்பதுதான், எவர்க்கும் விளங்காது, சமூக வாழ்க்கையும் அரசியல் கொள்கைகளும் நிலையற்று தடுமாறுவது போல, கலையும் தடுமாறித் தெளிவுபடாமல் சுயலாபப் போட்டிச் சங்கங்களாகப் பெருகி வருகின்றன. காங்கிரஸ் கக்ஷி தேசிய மோகம் கொண்டு, எத்துறையையும் தேசியமாக்க முனைவது போல, கலாசாரமும் எத்துறையிலும், எவ்வகைத்தோரையும் ஆக்ரமித்ததாகி, உண்மை ஒளியும் பெருமையும் மங்கி மறைந்து, மலிவான சரக்காகப் பணமும் பலமும் கொண்டோர் கைப்பிள்ளையாக விளையாடப்பட்டும் விலையாடப்பட்டும் வருகிறது. உண்மைக் கலையும் கலைஞரும், போலிக் கலை, கலைஞர் ஆக்ரமிப்புக் கீழ் அழுந்திவிட்டனர்.

பள்ளிச் சிறுவரிடை ஆத்மீக உணர்ச்சியும், மனக் கட்டுப்பாடும் பெருக வேண்டுமென்கிறார் உபஜனாதிபதி ஸ்ரீ ராதாகிருஷ்ணன், ராஜஸ்தான் பல்கலைக்கழக ஆண்டுவிழாப் பேச்சுரையில்! ஆனால், மத்திம, மாகாண, மதப்பற்றற்ற அரசாங்கங்களோ, நமது கல்வி திட்டம் எப்படியிருத்தல் வேண்டுமென்பதை இன்றும் ஓர் திடத்துடன் அறியாததாகி, வருஷா வருஷம், பதவி ஏற்கும் அதிகாரிகள் இஷ்டப்படி மாற்றித் திருந்திப் போவதால், கல்விமுறை அடிப்படையே அகன்றதாகி, கல்விக் கழகங்களும் அரசியல் கக்ஷித் தலைவர்களது கைப் பொம்மையாகிப் பலனற்று உள்ளன. தெய்வீக சம்பந்தமான பாடமே பயில்வியாது, மத உணர்ச்சியற்ற நூதன கலாசாரப் பாடங்களை வகுக்க வேண்டுமெனப் பாட புத்தகங்களையும் தேசியமாக்கி, அரசாங்கமே பாட புத்தகங்கள் எழுதி விற்க முன்வருமானால், கலாசாலைகள் கல்விக் கழகங்களாக எப்படியிருக்கமுடியும்?—மாணவர்களுக்கு மனக் கட்டுப்பாடும் தெய்வீக உணர்ச்சியும் எங்கிருந்து எப்படி எவர்மூலம் வரக்கூடும்?—தன் அரசாங்கமே செய்யாத காரியத்தைப் பற்றி உபஜனாதிபதி, பிரசங்க மேடைகளில் பேசிப் பயனென்ன?—

உயர்தரக் கலாசாலைகளில், இனி, பிரவேசக் கட்டுப்பாடுகள் உண்டாக்க வேண்டுமென மத்திம கல்வி ஆலோசனைக் கமிட்டி தீர்மானித்துள்ளது. திறனும், திறமையும் மங்கி வருகிறதாம்

தொழிற் கல்விச்சாலைகளிலும், அறிவுக் கலாசாலைகள திறனும் திறமையுமே உயர்தரக் கல்லூரிப் பிரவேசத்தி அனுமதியாக ஆங்கிலர் வகுத்த திட்டங்களைப் போக்கி, சுதந்தி அதிகாரிகள், கமிட்டி வைத்து, பரீட்சை முடிவின் குறிப்பை விடுத்து, ஆளின் அந்தஸ்தையொட்டியே கல்லூரிப் பிரவேசம் அனுமதித்தால், அறிவிலும் தொழிலிலும், திறனும் திறமையும் மங்காது என்செய்யும்?—ஜனத்தொகை பெருக்கத்தைத் தடுக்க எடுக்கும் வீண் முயற்சிகளை விடுத்து, பரீட்சை முடிவுகாட்டும் உண்மைத் திறனும் திறமையும் கொண்டோரை மட்டுமே நிஷ் பக்ஷபாதத்துடன் கலாசாலைகளில் அனுமதித்தால்தான் அறிவும், கலையும், பண்பும், தொழில்நுட்பமும் இனி வளர்வதாகும். இந்த எளிய முறையைக் கையாளக் கமிட்டிகளும் வேண்டாம்; ஆராய்ச்சிக் குழுக்களும் வீணே—அரசாங்க அதிகாரிகளுக்குத் தான் தெய்வீக உணர்ச்சியும், மனக் கட்டுப்பாடும் இனித் தேவை.

காங்கிரஸ் கட்சியின் கடமை இனி என்ன?

நாகபுரி அபயங்கார் நகர காங்கிரஸ் தீர்மானங்கள், காங்கிரஸ் கக்ஷியின் ஊழல்களையும், அரசுத் திறனின்மையையும், நிலையற்ற சமயப் போக்கான அனுஷ்டானமற்ற பிரசாரங்களையும், கோரும் பயனளியாத செயல்களைச் செய்து போவதையும், சுற்றிலும் தலைவிரித்தாடும் அதர்மங்களைப் பார்த்தும் பாராதது போல வளர விடுவதையும் நன்றாக எடுத்துக்காட்டி, ஒப்புவதுமாயிற்று. ராஜாஜி கூறுவது போல, சுதந்திரம் நிலைத்திட வேண்டுமானால், காங்கிரஸ் கக்ஷி புனரமைப்பு பெறவேண்டும். நாட்டில் உண்மைத் தேசியம் வளர்க்கும் கக்ஷியாக முன்போலக் காந்தியக் கக்ஷியாகப் பணியாற்றவே காங்கிரஸ் இனிக் கங்கணங் கட்டி அமைந்து உழைத்தல் அவசியம். அப்படிச் செய்தால் தான், முன்னர் ஆங்கிலரது அந்நிய ஆதிக்கமாம் தேசியப் பொது விரோதியைப் போக்க நாமனைவரும் ஒன்றுகூடி ஒருமித்து உழைத்தது போல, இன்றும் அதிகாரப் பித்துப் பிடித்துத் தேசிய போர்வையில் வேஷமிட்டு வளரும் தேசிய வேர்ப் புழுக்களையெல்லாம் அழித்து, ஒரே உண்மைத் தேசியத் தொண்டர்களை நாடு நிறைத்து, அவர்களில் திறம்பட்டவரே ஆளும் அதிகாரிகளாகவும், இதரர் அவர்களைக் கண்காணித்து வரும் எதிர்ப்புக் கக்ஷியாளராகவும் சட்டசபைகளில் நிறைத்து, இவர்களெல்லோரும் தெய்வீக உணர்ச்சியுடன், நாட்டின் பொதுநலன் நாடி, அவரவர் தத்தம் சுதர்மம் செழித்திட உழைத்திடச் செய்யக்கூடும். இல்லையேல், காங்கிரஸ் கக்ஷியே ஆளும் அதிகாரியாக இன்னமும் போட்டியிட்டு, ஓட்டு யாசித்துப் போமாகில், சீக்கிரத்திலேயே அக் கட்சி இந் நாட்டில் மங்கி மறையத்தான் அஸ்திவார மெழுப்புவதாகும். நாகபுரி காங்கிரஸ் கூட்டம் அறிவித்த இம் முன் எச்சரிக்கையை இனியாவது காங்கிரஸ் உண்மைக் காந்தி பக்தர்கள் அறிந்து, சுதந்திர இந்தியாவில் இனியாவது உண்மைத் தேசியக் குடி அரசுக்கு அடிகோலப் பாத யாத்திரை ஏற்பராக.

உள்ளம் கவர்ந்த ஊர்கள்

அஜந்தா, எல்லோரா

ஸ்ரீ டி. எஸ். ராஜகோபாலன், பி. ஏ., எல். டி.
ஹிந்து உயர்நிலைப் பள்ளி, திருவல்லிக்கேணி.

பண்டைக்காலத்திய பௌத்தரும் ஜைனரும் இலக்கியம், இலக்கணம், தர்க்கம், கணிதம், பௌதிகம் முதலிய கலைகளில் பேராற்றல் வாய்ந்திருந்ததுபோல், சித்திரம், சிற்பம்—இவற்றிலும் தேர்ச்சி பெற்றிருந்தனர். அவர்களது நூல்களை நாம் படித்து உள்ளம் குளிர்வதுபோல், அஜந்தா, எல்லோரா முதலிய இடங்களிலுள்ள குகைகளில் அமைத்துள்ள ஓவியங்களையும் குன்றுகளில் குடைந்தமைத்த கோயில்களையும் கண் குளிரக் காண்கிறோம்; மனக்கண்ணால் முன்னாள் நாகரிகத்தையும் கண்டு மகிழ்கின்றோம். அஜந்தா என்ற ஊர், ஔரங்காபாத் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து சுமார் 68 மைல் தொலைவிலுள்ளது. ரயில்வே ஸ்டேஷனிலிருந்து மோட்டார் பஸ்ஸில்தான் பிரயாணம் செய்யவேண்டும்.

முன் காலத்தில் பௌத்தர்கள் இறை வழிபாட்டிற்கென ஏகாந்தமான தலமாக அஜந்தாவைத் தேர்ந்து, அங்குக் கோயில்களும் பிக்ஷுக்கள் கூடி வாழ்வதற்கு இடங்களும் குன்றில் குடைந்து கொண்டனர். இவ்வாறன இடங்களைப் பற்றிக் கேள்வியுற்ற அக்காலத்துச் சீன யாத்ரீகர்கள், இவைகளை நேரில் பார்த்து இவற்றைப் பற்றிய குறிப்புக்களை எழுதி வைத்துள்ளார்கள். கி. பி. ஐந்தாவது நூற்றாண்டின் துவக்கத்தில் இங்கு விஜயம் செய்த பா-ஹியான் (fa-Hein) என்பவரும், ஏழாவது நூற்றாண்டில் வந்த யுவன் ச்வாங் (Yuan-Chwang) என்பவரும் அஜந்தாக் குகைகளைப் பற்றிப் புகழ்ந்துள்ளனர். இவ்வாறு உலகப் புகழ் வாய்ந்த இக் குகைக் கோயில்கள் நாளடைவில் பாழடைந்தன. பல நூற்றாண்டுகட்குப் பிறகு 1819-ம் ஆண்டில் ஆங்கிலப் போர் வீரர்கள் சிலரால் இவைகண்டு பிடிக்கப்பட்டன. பின்னர் சரித்திர ஆராச்சியாளர் இங்குச் சென்று இவற்றின் பெருமையை உலகுக்கு வெளியிட்டனர்.

இந்தக் குகைகள், சுமார் 150 அடி உயரமுள்ள ஒரு மலைத் தொடரில் உட்பக்கமாக அமைந்துள்ளன. மலைத் தொடர், குதிரையின் லாடம் போன்ற வடிவமுடையது; நடுவில் பெரிய தொரு பள்ளத்தாக்கு உள்ளது. மலையின் ஒரு பக்கத்திலிருந்து ஓர் அருவி, நீர்வீழ்ச்சியாகத் தரையில் பாய்ந்து, பள்ளத் தாக்கின் நடுவே ஓடுகின்றது. மலைச் சரிவு முழுதும் மரங்கள் அடர்ந்து பூங்காவைப் போல் திகழ்கின்றது. இந்தக் குகைகள் எல்லாவற்றிலும் இயற்கையான வெளிச்சம், பகற் போதில் சிறிது காலமாவது இருக்கும். இக் குகைகள் மொத்தமாக 29; இவற்றுள் 25 விஹாரங்கள்—பிக்ஷுக்கள் வாழுமிடங்கள்; மற்றவை சைத்யங்கள்—வழிபாட்டிற்கான ஆலயங்கள். விஹாரங்களில் பிக்ஷுக்கள் ஆசிரியர்களிடம் பாடம் கற்றுக் கொள்வதற்காக மண்ட

பங்களும், ஓய்வெடுத்துக் கொள்வதற்காகத் திண்ணைகளும் உள்ளன. சைத்யங்கள், யாவரும் கூடி வழிபாடு செய்வதற் கேற்ப அமைந்துள்ளன. இங்குள்ள மண்டபங்கள் பெரியவை. இந்த மண்டபத்தின் எதிர் முனையில் புத்த தேவனுடைய பிம்பமாவது,மேடையாவது அமைந்திருக்கும். சுவர்களில் சித்திர வேலைப்பாடுகள் நிறைந்துள்ளன. ஒவ்வொரு குகையும் ஒரு முழுக் குன்றிலிருந்து குடையப்பட்டது. குகையின் வாசலின் அமைப்பு, வியக்கத்தக்க வகையிலுள்ளது. தூண்கள், கைப்பிடிச் சுவர்கள், மேலுள்ள விமானங்கள் முதலியன யாவும் குன்றுகளில் செதுக்கப் பட்டவை; நல்ல வேலைப்பாடுகள் கொண்டவை. சைத்யங்களின் மண்டபங்களில் எதிர்ப் பக்கத்திலுள்ள வளைவுகள் போகப் போகக் குறுகுகின்றன; தொலைவிலிருந்து பார்த்தால் யானையின் பின்பக்கம் போல் தோற்றமளிக்கின்றன; இந்த அமைப்பிற்கு **கஜப்ருஷ்டம்** எனப் பெயரிட்டுள்ளனர்.

இந்த ஆலயங்களிலுள்ள மூர்த்திகள், மனித உருவைப் போல் மும்மடங்கு பெரிய. இரண்டு,மூன்று ஆலயங்களில் புத்தர் கால்களைத் தொங்கவிட்டுக் கொண்டு வீற்றிருக்கும் நிலை காட்டப் பெற்றுள்ளது. முதல் குகையில் புத்தர் கால்களை முடக்கிக் கொண்டு யோக நிலையில் வீற்றிருக்கிறார். தலை, சடை முடி அணிந்துள்ளது. முகத்தை நேரில் நின்று கவனித்தால் புன்னகை தோன்றுகிறது; ஒரு பக்கத்தில் நின்று பார்த்தால் தவத்தினருக்கு வேண்டிய அமைதி திகழ்கின்றது;வேறொரு பக்கத்தி நோக்கினால் அருளும் பும் தவழ்கின்றன. புத்த குப் பின் புறம் பெரியதொ பிரபை வேலைப்பாட்டுடன் பொலிகின்றது. அதன் இரண்டு பக்கங்களிலும் இரண்டு கந்தர்வர்கள் மாலையுங் கையுமாக நிற்கின்றனர்.

அஜந்தாவிலுள்ள குகைகள், அவற்றிலுள்ள சித்திர வேலைப்பாடுகளுக்காகப் பேர் போனவை. சித்திரங்கள் மங்காத வண்ணம் அதிகாரிகள் கவனித்து வருகின்றனர். எனினும் இவற்றுள் பெரும்பான்மையானவை தெளிவாக இல்லை. நாம் காணக்கூடிய சித்திரங்கள் ஒவ்வொன்றையும் ஓர்ந்து பார்க்க வேண்டில் நாள் கணக்கிலாகும். இவற்றை நன்கு தெரிந்து கொள்வதற்குப் பௌத்தமதமும் புத்தரது சரிதமும் சிறிதளவாவது தெரிய வேண்டும். முன் பிறவிகளில் புத்தர் பிரான் செய்துள்ள தியாகங்கள் யாவும் இச்சித்திரங்களில் விவரிக்கப் பெற்றுள்ளன. புத்தர் அவதாரம் செய்ததும், அவர் காட்டுக்குச் சென்றதும், அவரது தவத்தைக் குலைக்க மாரன் செய்த செயல்களும், பிறவிகள் தோறும் அவரது வாழ்க்கையும் விளக்கப் பட்டுள்ளன. புத்தர் தவம் செய்யும்போது அவருக்கு எதிரில் மாரன் தனது பணியாளர்களுடன் தோன்றித் தவத்தைக் கெடுப்பதும், அவனது பெண் பாட்டுப் பாடிப் பறையடிப்பதும், பாடும்போது உதடுகளின் நெளிப்பும், பறையடிக்கும் போது உடலின் வளைவும்—இவ்வாறான ஒவ்வொரு விவரமும் சித்திரத்தில் நன்கு விளங்குகின்றன. ஓர் ஓவியத்

...தர் தம் பூதவுடலைநீத்து ...னறுவது காட்டியுள்ளது. ...தர் தரையில் சாய்ந்துள் ...ளார்; அவரது சீடர்கள் துயர மும் மனக் கலக்கமும் தோன்ற வீற்றிருக்கின்றனர்; வானிலுள் ளவர்களோ எனில் புத்தரை வரவேற்க மகிழ்ச்சியுடன் ஆர வாரிக்கின்றனர். சித்திரங்க ளில் சுவைகள் யாவும் நன்கு விளக்கமுற்றுள்ளன. ஓரிடத் தில் நங்கையொருத்தியின் ஓவி யம் உள்ளது. அவளது அரை யில் சுற்றிய மெல்லிய சரிகைப் பட்டாடையும், ஒசிந்த இடை யும், தனபாரத்தால் துவண்ட மேனியும், மெல்லிய உதடுக ளும், நீள்கொடி மூக்கும், நீண்ட மைதீட்டிய கண்களும், தலையில் குழல் மேலணிந்த பொற்கட்டும், உயர்த்திக் கட் டிய கூந்தலும், காதிலிருந்து தாழுங் குழைகளும்—ஒவ் வொன்றும் எல்லையற்ற அழகு வாய்ந்தது. இதே மாதிரியான ஓவியங்கள் பலப்பல இன்னும் நம் உள்ளத்தைக் கவரக் கூடிய நிலையிலுள்ளன. இவற்றை ஆராய்ந்தால் முன்னுள் நம் நாட்டு நாகரிகம் எந்த உச்ச நிலையிலிருந்தது என்பது தெற் றென விளங்கும். அக்காலத் திய வாழ்க்கை, ஆடைகள், ஆபரணங்கள் முதலியவற்றை நாம் ஆடியில்போல் காண்கி றோம்.

எல்லோராக் குன்றுகள், ஔரங்காபாத்திலிருந்து வட மேற்கில் 16 மைல் தொலை விலுள்ளன. இக்குன்றுகளில் சுமார் 10 பர்லாங்க் நீளத்திற் குத் தெற்கு வடக்காக 34 குகைகள் அமைந்துள்ளன. இவற்றுள் சிற்ப வேலைப்பாடு கள் நேர்த்தியாக வுள்ளன. இவற்றுள் 15 பௌத்தமதக் கோயில்களாகும்; 5 ஜைனர் கோயில்களாகும்; 17 ஹிந்து மதக் கோயில்களாகும். பௌத் தக் கோயில்களுள் முதல் ஐந்து ஒரு வகையைச் சார்ந்த வை; மற்றவை வேறு வகையி லமைந்தவை. 5, 12 என்று இலக்கமிட்ட குகைகள், நிக ரற்ற வேலைப்பாடு கொண்ட வை. ஜைனர் குகைகளுள் இரண்டு, மெச்சத்தகும் வகை யில் அமைந்தவை. ஜகந்நாத் ஸபை, இந்திரஸபை எனப் பெயர் கொண்ட இவை, மாடி யுடன் கூடியவை.

மற்றைக் குகைகளுள் முதன் மையானது 16 என்றிலக்க



கைலாஸ் நாத் or
ரங்க மஹால்

மிட்டதாகும். இது கைலாஸ் நாத், அல்லது ரங்க் மஹால் எனப்படும். இது ராஷ்ட்ரகூட மன்னன், முதலாவது கிருஷ்

ணனால் (கி. பி. 757-782 ஆண்டுகளில்), வேலை செய்யப் பெற்றது. இது காஞ்சிக் கைலாசநாதர் ஆலயத்தைப் போல் அமைக்கப் பெற்றுள்ளது. இது 164 அடி நீளமும், 100 அடி அகலமும், 96 அடி உயரமுள்ளது; இரண்டு மாடிகள் கொண்டது. இது ஒரே மலையில் வெட்டப் பெற்று, உள்ளேயும் குடையப் பெற்றது. கீழ்த் தளத்திலிருந்து நமது தென்னாட்டு முறையில் கோபுரமும், பிராகாரமும், அர்த்த மண்டபமும், மஹா மண்டபமும் அமைந்துள்ளன. உலகில் இதற்கு நிகரான வேலைப்பாடே இல்லை யென்பது மிகையாகாது. இந்தக் கோயிலிலுள்ள சிற்ப வேலைப்பாடுகளை பார்த்து ஒருவாறு தெரிந்து கொள்வதற்கே நாட்கள் பல ஆகும். கோயிலுக்குள் மூர்த்திகளுக்காக வுள்ள மண்டபங்களின் வெளிப்புற வேலைப்பாடும் உள்ளே செய்துள்ள வேலைப் பாடும் பண்டைச் சிற்பிகளின் பேராற்றலை நன்கு விளக்கும். மண்டபங்களை நான்கு பக்கங்களிலும் மதத் களிறுகள் தாங்கி நிற்றதாகக் காட்டப் பெற்றுள்ளது. வெளிச் சுவர்களில் இதிஹாஸ புராணங்களிலுள்ள வரலாறுகள் சிற்பங்களில் விளக்கப் பெற்றுள்ளன. பிராகாரத்தின் சுவரில் விஷ்ணுவின் அவதாரங்களும் சிவனது விளையாடல்களும் செதுக்கிக் காட்டப் பட்டுள்ளன. ஆலயத்தின் வலப் பக்கத்தில் சுவரில் எட்டு வரிசையில் இராமாயணம் முழுதும் காட்டியிருக்கிறது. கீழ்த் தளத்திலிருந்து படிக்கட்டின் வழியே மேல் மாடிக்குப் போகலாம். மேல் மாடிகளிலும் சுவர்கள் முழுதிலும் சிற்பங்கள் உள்ளன.

29 என்று இலக்கமிட்ட குகையில் பார்வதி பரிணயம் சிற்பத்திலுள்ளது. வேலைப் பாட்டின் நேர்மையை நேரில் கண்டு களிப்பதல்லாமல் சொல்லிலமைக்க இயலாது. இறைவன் பெருமை தோற்ற நிற்பதும், அருகில் பார்வதி மின்னற் கொடிபோல் நிற்பதும், மற்றை விவரங்கள் ஒவ்வொன்றும் நேரில் காண்பது போலவே

★



★

உள்ளன. இதைப் பார்த்ததும் காளிதாஸரது குமார ஸம்பவ வர்ணனை நினைவுக்கு வருகின்றது. குகை 14-ல் இராவணன் கைலாசத்தைப் பெயர்த்தெடுப்பது காட்டியுள்ளது. அவன் தனது இருபது கரங்களுடன் சிகரத்தை ஆட்டுவதும், மேலே அமைந்துள்ள உமை,தேவர்கள்—இவர்களது நடுக்கமும், இறைவனது அமைதியும்—எள்ளளவேனும் பிழையில்லாமல் நாம் நேரில் காணும் வண்ணம் அமைந்துள்ளன. இராவணன் சீதையைத் தூக்கிச் செல்வதும், சிவபெருமான் நடனமாடுவதும், பைரவ மூர்த்தியும் இணையில்லாத வேலைப்பாடுகளாகும்.

எல்லோராக் குகைகளிலிருந்து முக்கால் மைல் தூரத்தில் ஓர் ஆலயம், தஞ்சை பிரஹதீச்வரரது ஆலயம்போல் அமைந்துள்ளது. இதில் கோயில் கொண்டுள்ளவர், சோதிலிங்கப் பெருமான். இது பதினெட்டாவது நூற்றாண்டில் அஹில்யாபாய் என்பவளால் கட்டப் பட்டது.

ஔரங்காபாத்திலும் இவ்வாறான வேலைப்பாடுகள் வாய்ந்த குகைகள் பல உள்ளன.

*

மதிப்புரை

ஸ்துதி மணிமாலை

[(முதல்பாகம்) இயற்றியவர்: நீலா ராமமூர்த்தி, சென்னை-28. டெம்பி 112 பக்கங்கள். விலை ரூ. 2.50]

"ஆயகலைகள் அருபத்து நான்கினையும் ஏய உணர்விக்கும் என்னம்மை" என்று கம்பன் கலைராணியைப் போற்றிக் கலைகளின் எண்ணிக்கையைக் காட்டி அழகாக அந்தாதி பாடியிருக்கிறார். ஆனால், கலை கலை என்று வாய் ஓயாது மக்கள் சொல்லத் தெரிந்ததே யன்றி 64 கலைகள் எதெது என்ற விவரமறிந்தவர்கள் ஒரு சிலரேதான் என்றால் மிகையாகாது. அவைகளில் இசைக் கலை, சாகித்யக் கலை, இவைகளை மட்டும் உலகம் அறிந்தும் அறியாமலும் போற்றிப் பெருக்கி வளர்க்கின்றது. இசைவாணன் தனது திறமையால் — கலைவாணியின் கருணையால்— வெகு அத்புதமாகப் பாடும் சக்தி இருந்துவிட்டால் மட்டும் போதுமா? ஸரியான பக்ஷணம் செய்வதற்கு நல்ல பதார்த்தங்கள் தேவை போல் உயர்ந்த கருத்தும் உத்தம பக்தியின் பரிமளமும் உள்ளத்தை உருக்கும் பதப்ரயோகங்களும்கூடிய அழகிய சிறந்த ஸாஹித்யம் இருந்தாலன்றி கச்சேரி எடுப்பதில்லை. ஸ்ரீமதி நீலா ராமமூர்த்தியின் கவிதைகள் அத்தனையும் பொருந்திய அமுதாக இருப்பதை மனங்களிக்க K. B. S. பாடி மக்களைப் பரவசப்படுத்துவதிலிருந்து நன்றாகத் தெரிந்திருக்கிறது. கற்பனையுடன் பக்தி கலந்த இந்த ஸாகித்யங்களை முக்கியமாக எல்லாப் பெண்மணிகளும்—கச்சேரி செய்யும் பெண்மணிகள்—கட்டாயம் பாடி சாகித்யத்தை மேலும் மேலும் வளரச் செய்ய வேண்டுவது கடமையாகும்.



சங்கங்களின் சேவை

ஸ்ரீநிவாஸ காந்தி நிலையம்

வசுமதி ராமஸ்வாமி

ஸ்ரீமதி எஸ். அம்புஜம்மாள் அவர்களை தமிழ் நாட்டில் அறியாத சகோதரிகள் இருக்க முடியாது. தமிழ் நாட்டு சகோதரிகளுக்கு சேவை செய்யவே அவர் பிறந்திருக்கிறார் என்றால் மிகையாகாது. இன்னும் அவர்களுடன் நெருங்கிப் பழக வாய்ப்பு வேணுமென விரும்பினால் ஸ்ரீநிவாச காந்தி நிலையத்தில் தொடர்பு கொள்ளுங்கள். சற்றேறக்குறைய சுமார் முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் மிகச் சிலரால் நடத்தப் பட்ட இந்திய மாதர் சங்கம் ஒரு பலஹீனக் குழந்தையைப் போல் இருந்தது. ஒரு மர பீரோ, சிறிய மேஜை, நாற்காலி, அழிந்ததும் அழியாததுமான ஒரு போர்டு இவைகளுடன் அம்புஜம்மாள் இந்த சங்கத்தைக் கையேந்திக் கொண்டார்.

இன்று இந்திய மாதர் சங்கம் ராஜ்ய சர்க்கார், மத்திய சர்க்கார் இரண்டிலும் கௌரவிக்கப்பட்டு இன்றியமையாத ஸ்தாபனமாக விளங்கி வருகிறது. நாற்பது ஆண்டுகள் பூர்த்தியாகி விட்டது. இந்த நீண்ட காலத்தில் சங்கத்தின் தலைவிகளாக டாக்டர். முத்துலக்ஷ்மி ரெட்டி அம்மையார், ஸ்ரீமதி. ராதாபாய் சுப்பராயன், அம்மு ஸ்வாமிநாதன், கஸின்ஸ் அம்மையார் முதலியவர்கள் பொறுப்பேற்று நடத்திக் கொடுத்திருக்கிறார்கள். ஸ்ரீமதி

சாவித்திரி ராஜன், ஸ்ரீமதி எஸ். அம்புஜம்மாள், ஸ்ரீமதி சரோஜினி வரதப்பன் இன்னும் அனேக சகோதரிகள் செயலாளர்களாக இருந்து பணி புரிந்திருக்கிருர்கள். பெண்களுக்கு சட்டபூர்வமான உரிமைகளை இச்சங்கம் பெற்று அளித்திருக்கிறது. தாழ்த்தப் பட்ட பெண்கள் நேர்மையாக சம்பாதித்து வாழ வழி வகுத்திருக்கிறது. சமூகத்திலிருக்கும் ஊழல்கள், அக்ரமங்களை வன்மையாகக் கண்டித்து ஒழித்துக் காட்டியிருக்கிறது. இதன்றிப் பெண்கள் நலனுக்காக அவ்வப்பொழுது போராடி வெற்றி யடைந்திருக்கிறது. கைத் தொழில், குடிசைத் தொழில், முதியோர் கல்வி முதலியவைகளை பேணி வளர்த்திருக்கிறது. எழும்பூரிலிருந்து மயிலைக்கு வந்த இந்திய மாதர் சங்கம் தனக்கென்று இடம் இல்லாமல் பல இடங்களில் ஒண்டு குடும்பம் நடத்தியது. அதனுடைய அலுவல்கள் மட்டும் தினே தினே பெருகின. அதனல் இடக் கஷ்டம் அதிகரித்தது. இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் ஸ்ரீமதி எஸ். அம்புஜம்மாள் சங்கத்திற்காக ஒரு கட்டிடம் நிறுவி நன்கொடையாகவும் அளிக்க முன்வந்தார். சங்கத்தைச் சேர்ந்தவர்களும், மற்றவர்களும் அவருடைய தாராள மனதைப் பலமுறை பாராட்டினர்

கள். 1945-ம் ஆண்டு இந்திய மாதர் சங்கம் அகில இந்திய மாதர் மகாநாட்டுடன் இணைக்கப்பட்டது. மயிலேயில் சங்கத்தின் கட்டிடம் அமையும் போது 1947-ம் ஆண்டு சென்னையில் மாதர் மகாநாட்டுக் கூட்டம் அமோகமாக நடைபெற்றது. இந்தியாவில் மட்டுமல்ல. உலகத்தின் பல பாகங்களிலிருந்து பெண்கள் வந்து இம்மகாநாட்டில்கலந்துகொண்டார்கள். அப்பொழுது நகரத்தில் ஆறு கிளைகள் இருக்க வேண்டுமென சங்கத்தின் நிர்வாகிகள் தீர்மானம் செய்தார்கள். எனவே அம்புஜம்மாள் எழுப்பின கட்டிடம் மயிலைக் கிளைச் சங்கமாக ஸ்தாபிக்கப்பட்டது.

அம்புஜம்மாளின் தந்தை ஸ்ரீ எஸ். ஸ்ரீநிவாஸ ஐயங்கார் பெயரையும், தேசபிதா காந்திஜியின் பெயரையும் இணைத்து "ஸ்ரீநிவாஸ காந்தி நிலையம்" என்ற பெயருடன் உருவாயிற்று. முதன் முதலாக பால் பண்ணை நடத்திய பெருமை நிலையத்திற்கு ஏற்பட்டது. மகாத்மா ஜியின் நிர்மானத் திட்டங்களை நிறைவேற்றுவது நிலையத்தின் கொள்கை. ஏழை பெண்களுக்கும்,குழந்தைகளுக்கும் உதவி புரிய வேண்டும். ஆனல் அதை அனுதை ஆச்ரமமாக நிறுவக் கூடாது என்று ஸ்ரீமதி அம்புஜம்மாளின் கருத்து. அதனல் பெண்களின் சகிப்புத் தன்மை குறைந்து, குடும்பத்தை விட்டு வெளியேறி ஆச்ரமத்தில் சேர தூண்டும் என்ற உயர்ந்த எண்ணம் அவர்களுக்கு இருக்கிறது.

இங்கே தினம் காலை நூற்றுக்கணக்கான குழந்தைகளுக்குப் பால், கஞ்சி அளிக்கப்படுகிறது. 50 குழந்தைகளுக்கு பூர்வாதாரக் கல்வி வகுப்பும் நடை பெறுகிறது. நூற்றுக் கணக்கான ஏழை மக்களுக்கு இலவச வைத்திய உதவி நடக்கிறது. முதியோர் கல்வி வகுப்பில் 75 பெண்கள் படிக்கிருர்கள். தையல் வகுப்பு நல் முறையில் நடத்தப் படுகிறது. சர்க்கா வகுப்பில் அறுபது பெண்களுக்கு மேல் பிற்பகலில் நூற்கிருர்கள். மாதம் 400 சிட்டங்கள் உற்பத்தி செய்யப் படுகின்றன. இரண்டு தறிகளில் நூல்களை அழகான துணிகளாக நெய்கிருர்கள். வெள்ளிக் கிழமைதோறும் பஜனை, பிரார்த்தனை நடைபெறுகிறது. ஏழைப் பெண்களுக்கு தேவையான கைத்தொழில்களை நடத்தவும் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. மகான்கள் தினம், தேசிய தினம் முதலியவைகள் அறிவு தரும் முறையில் கொண்டாடப் படுகிறது. தலைவியின் அன்பு என்ற கயிற்றில் கோர்க்கப்பட்ட மணிகளாக நிர்வாகிகளும், செயலாளர்களும் அமைந்திருக்கிருர்கள். இம்மாதிரி சீரும், சிறப்பும் பெற்ற ஒரு தொண்டு நிலையம் இருப்பது பெண்களின் பெருமைக்கு எடுத்துக் காட்டாக இருக்கிறது. ✲

கூண்ணீர்.

✲

பிச்சைக்காரன்:- ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடிவாங்க குடல் நிறைக்கும்...

வீட்டுக்காரன்:- அப்பனே! திருப்பாவையை கொலை பண்ணி பாடினுலும் அரிசி வாங்கி உன் குடலை நிறைச்சிக்கரே... பாடர்தே தப்பு இல்லாமே பாடிபிழையப்பா...

பின்னணி

இசை மண்டலம்

பி. வி. ஜெயராமன்



மககளை மகழ்விக்கும்
சீர்காழி கோவிந்தராஜன்

சீர்காழி என்னும் பெயர் பெற்ற தஞ்சை ஜில்லாவில் உள்ள க்ஷேத்திரத்தில் 19-1-1933-ல் திரு சிவசிதம்பரம் செட்டியார் அவர்களுக்கும், திருமதி அவயாம்பாளுக்கும் பிறந்த ஐந்து குழந்தைகளில் ஒருவர்தான் நமது கோவிந்தராஜன். இவர் ஒரு சங்கீதப் பரம்பரையில் தோன்றாவிட்டாலும், ரசிகப் பரம்பரையில் தோன்றியவர். நமது கோவிந்தராஜன் நினைவு தெரிந்த நாள் முதல், நன்றாக வாய்ப் பாட்டுப் பாடிக் கொண்டிருப்பார். இவர் தமிழ் இசைச் சங்கத்தில் இரண்டாண்டு பயின்று "இசை மணி" என்ற பட்டம் பெற்றார், கோபால கிருஷ்ண பாரதியாரின் பாட்டுப் போட்டியில் ராஜாஜீயின் பரிசான தம்பூராவை, நாமக்கல் கவிஞர் மூலமாக அடையும் பாக்கியத்தைப் பெற்றார். இவர் கர்நாடக சங்கீத மத்திய பயிற்சிக் கல்லூரியில் இரண்டாண்டு பயின்று "சங்கீத வித்வான்" பட்டமும் பெற்றவர்.

1953-ல் ஆர். ஆர். சபா, மியூஸிக் அகாடமியில் நடந்த சங்கீதப் போட்டியிலும் முதல் பரிசைப் பெற்றார்.

இவர் பத்து வருட காலமாக ரேடியோவில் பாடிக் கொண்டு, மக்களை மகிழ்வித்து வருகின்றார். அவ்வப்போது பல சிறந்த சங்கீத வித்வான்களின் கச்சேரிகளைக் கேட்டு, தானும் பல சபைகளில் அடிக்கடி பாட்டுக் கச்சேரி பல பாடி வருகிறார்.

இவர் முதன் முதலில் புகழ் வாய்ந்த "பொன் வயல்" என்ற சினிமாவில் பாடும் வாய்ப்பைப் பெற்றார். இவரை முதலில் சினிமாத் துறையில் அறிமுகப் படுத்தியவர்கள் ஹாஸ்ய நடிகர்களான டி. ஆர். ராமச்சந்திரன், சாரங்கபாணி, டைரக்டர். ஸ்ரீ ஏ. டி. கிருஷ்ணசாமி, சங்கீத டைரக்டர் அப்துல்காதர், முதலியவர்கள். இந்நால்வரும்தான் முதன் முதலில் தங்கள் படமான "பொன்வய"லில் எனக்கு சந்தர்ப்பம் கொடுத்து பாடவைத்து முன்னுக்குக் கொண்டுவந்தார்கள் என்றும், தான் இவ்வளவு செல்வாக்கும், புகழும் அடைந்ததன் காரணம் தனது குருநாதரும், தன்னைச் சென்னையில் தன்னுடனேயே தங்கவைத்து, தனது சித்தப்பாவான "சினிமா உலகம்" பத்திரிகை ஆசிரியரான ஸ்ரீ பி. எஸ். செட்டியாரும்தான்

என்று பெருமிதத்துடனும், மிக்க நன்றி உணர்ச்சியோடும் கூறி அவர்களுக்கு என்றென்றும் கடமைப் பட்டிருப்பதாகவும் கூறினர்.

சினிமாவில் இவரால் பாடப் பட்டு,பல ரசிகர்களின் அமோக ஆதரவைப் பெற்று, கோவிந்தராஜன் அவர்களுக்கு மிகவும் புகழைத் தேடிக் கொடுத்த பாட்டுகளில் சில பின் வருபவை:

"சிரிப்புத்தான் வருகுதையா"
—பொன்வயல்

"சமரசம் உலாவும் இடமே"
—ரம்பையின் காதல்

"அமுதும் தேனும் எதற்கு"
—தைபிறந்தால் வழிபிறக்கும்.

இவரது குருநாதர் சங்கீத கலாநிதி திருப்பாப்புரம் சுவாமிநாத பிள்ளை ஆவார்.

இவர் 1956-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 26-ம் தேதி திருமதி. சுலோசன அம்மையாரை மணந்து கொண்டார். தற்போது ஞானவல்லி என்ற ஒரு குழந்தையும் இருக்கிறது.

இவரை அரசியலைப் பற்றி கேட்டபோது, கலைஞர்களுக்கு கட்சியே கூடாது. கலைக்கட்சி தான் எங்களுக்குத் தேவை என்கிறர்.

ஸ்ரீ கோவிந்தராஜன் அவர்களைச் சந்தித்துப் பேசுகையில் அவரது குணதிசயங்களை நன்கு அறிய முடிந்தது. கோவிந்தராஜன் அவர்கள் ஸ்ரீ முருகப் பெருமானிடம் மிகுந்த பக்தி உள்ளவர்; என்ருலும் எம்மதமும் சம்மதம் என்ற கொள்கையும் உடையவர். வெள்ளை. உள்ளம் கொண்டவராகவும், பார்ப்பதற்குப் பரம சாதுவாகவும் இருக்கிறர். எப்பொழுதுமே சிரித்து சிரித்துப் பேசுகிறர். எல்லோரிடத்திலும் அன்பாகவும், அழகாகவும் பேசுகிறர். பழகுவதற்கு தங்கமானவர். அவரிடம் பேசியதிலிருந்து தன்னை முன்னுக்குக் கொண்டு வந்தவர்களையும், தன் குருநாதரையும் பற்றி மிகவும் உயர்வாக மதிப்பதைக் கண்டேன். அவரது புகழுக்குக் காரணம் அவரது அன்பும், பண்பும் பெரியோர்களிடத்தில் கொண்டுள்ள பக்தியும் தான் காரணம் என்பது எனது அபிப்பிராயம்.

இவருடன் பேசியதிலிருந்து இவர்மனதிலேஒருகுறை இருப்பதாகத்தெரிகிறது. அதாவது: சங்கீத வித்வானகத் திகழ ஐந்து ஆண்டுகள் படித்து சங்கீதப்பட்டம் பெற்றவர்களுக்கு, மற்ற படிப்புகளைப் போல வேலைகளில் சேருவதற்கு வாய்ப்பு வசதி இல்லையே; சொந்த முயற்சியால் தானே முன்னுக்கு வரவேண்டியிருக்கின்றது. ஆதலால் சங்கீதக் கலையில் படித்துப் பட்டம்பெற்றவர்களை பள்ளிகளில், கட்டாயமாக சங்கீத ஆசிரியராகவாவது எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனை யிட்டு, மற்ற சக கலைஞர்களையும் ஆதரிக்க வேண்டும். அதற்கு அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும் என்றும் அத்துடன் புதிய இளம் வித்வான்களை சபாக்களும் ஆதரித்துஆவன செய்ய வேண்டும் என்றுவிரும்புகிறர்.

கடைசியாக மோகினியின் வாசகர்களுக்கு ஏதாவது செய்தி கூறக் கேட்டதற்கு, இந்த சந்தர்ப்பத்தைக் கொடுத்தஉங்களுக்கும்,உங்கள் வாசகர்களுக்கும் நன்றி என்று

கூறிவிட்டு, இன்னும் பழைய ஜகன்மோகினி புத்தகங்களும் ஆல்பங்களும், வை. மு. கோ வின் நாவல்களும் எங்கள் சித் தப்பா பி. எஸ். செட்டியார் வீட்டில் இருப்பதாகவும், குழந் தையிலிருந்தே தனக்கு மோகி னியைப் பற்றி தெரியுமென் றும், மென்மேலும் மோகினி வளர்ந்து மக்களுக்கும் நாட்டுக் கும் சேவை செய்ய வேண்டும் என்றும் கூறினர்.

இறுதியாக அவரைப் பற்றி நாட்டுக்குவேண்டிய நல்ல விஷ யங்களைப் பாட்டில் புகுத்தி, அறிவும் பண்பும், பரப்ப வேண்டி, வாழ்க்கை என்னும் வழிந்தோடும் இனிய நீரோட் டத்திலே, செயல், திறமை என்னும் துடுப்புக்களைக் கொண்டு முயற்சி என்னும் படகிலே முன்னேறிச் சென்று கொண்டிருக்கின்றார். முயற்சி மனிதனை முதல்வனுக்கும் என்ற நிகழ்ச்சிக்கு எடுத்துக் காட்டாக விளங்கி வருகின்ற நமது கோவிந்தராஜன் அவர் கள், கலைத் துறையில் இன் றும்போல் என்றும் முதன்மை பெற்று, ஓயாத உழைப்பும் பிறரும் தன்னைப் பின்பற்றக் கூடிய புதுக் கருத்தும், அன் பும், நற்பண்பும் ஒருங்கே அமையப் பெற்று, நீண்ட காலம் வாழ்ந்து, கலையுலகிற் கும், நாட்டிற்கும் சேவை செய்ய வேண்டும்; அதற்கு வேண்டியவைகளை எல்லாம் வல்ல இறைவன் அளிக்க வேண்டும் என்று, ஆண்ட வனை, மோகினியின் சார்பாக வேண்டுகின்றோம்.

'நிறை குடம் நீர் தளும்பாது' என்பது பழமொழி. அந்தப் பழமொழியை நாம் ஒரு சில ரிடத்தில்தான் காண முடி கிறது. அம்முறையில் நமது கோவிந்தராஜன், அப் பழ மொழியை நிதர்சனம் செய்து அதற்கு ஒரு பெருமையே கொடுத்துவிட்டார் என்று நான் சொல்லுவேன். முதன் முதல் நான் அவரை சந்தித் துப் பேசும்போது வெகு நாட்கள் பழகியது போன்ற அன்புக் கனிவுடன் சகஜமாகப் பேசி, தம் அபிப்பிராயத்தை எல்லாம் தாராள மனப் பான்மையுடன் கூறி என்னை மகிழ்வித்ததற்கு மோகினியின் சார்பாகவும் என் சொந்த ஹோதாவிலும் பிரித்தியோக வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

●

கண்ணன்

இப்படி இசைக்கிறான்

●

சோறுபோட்டு போவாயோ!
அம்மா சின்னம்மா...
என்தொந்தி எல்லாம் நிறையுமே
அம்மா...சின்னம்மா...
பருப்பு சாம்பார் வேண்டும்
பச்சடி துவையல் வேண்டும்
இனிப்பு பக்ஷணம் வேண்டும்.
நல்ல வாட்ட சாட்டமாக
சோறுபோட்டு போவாயோ!
அம்மா...சின்னம்மா...

●

அன்பு அருவி

விஜயலக்ஷ்மி வரதராஜன்

இரண்டு

யார் குற்றவாளி?

அனுஷா திக்பிரமை பிடித்து நின்றுவிட்டாள். அவள் அவயவங்கள் இயங்க மறந்து செயலற்று நின்றன. அவள் உள்ளம் உண்டாக்கிய பதைபதைப்பில் இன்ஸ்பெக்டர் ரவிந்திரன் பேசிக் கொண்டே போனதில் ஒரு வார்த்தையும் அவள் செவிகளில் பதியவில்லை. மனத்தில் ஒட்டவில்லை. நாயின் வாயில் தன் கைக்குட்டையை—அதுவும் பணத்தோடு—கண்டதும் அவள் உடலே துவண்டு, கீழே விழுந்துவிடும் நிலைமைக்குக் கொண்டு வந்துவிட்டது.

'ஐயோ! ஆண்டவனே! இதென்ன சோதனை? என் கைக் குட்டை இங்கு எப்படி உதித்தது. அதில் பணம் எப்படி வந்தது. ஒருவேளை! திருடன் போகும்போது கை நழுவி விழுந் திருந்தாலும், என கைக்குட்டை அவனிடம் எப்படி சென்றது. திருடு போனதைவிட இது மர்மமாக இருக்கிறதே. என்னுடையது என்பதைக் கண்டுபிடித்து இன்ஸ்பெக்டர் என்னைச் சந்தேகிப்பாரா? ஆ...என் கதி...? நிராதரவற்ற என் தாயின் கதி?' என்று பல எண்ணங்கள் தோன்றி அவள் நெஞ்சை வேகச் செய்தது. என்ன செய்வதென்று அறியாது அவள் மெய் குன்றி குறுகியது.

'நாம் இங்கிருந்து சென்றுவிடலாமா?......சே...அதுதான் தவறு. இன்ஸ்பெக்டருக்கு சந்தேகம் எழுப்புவதற்கு என் செய்கையே காரணமாகிவிடுமே...' என்று மனதிற்குள் கூறிக் கொண்டாள். அவள் முகம் வெளிறிவிட்டது. மனதிலிருப் பதை மறைக்க முயன்று, நாற்காலியை ஆதாரமாகப் பிடித்துக் கொண்டு, சங்கரனின் பின்னல் நின்றுவிட்டாள்.

இன்ஸ்பெக்டர், நாயின் வாயிலிருந்த கைக்குட்டையை எடுத்து பரிசோதித்தார். கசங்காது, நலுங்காது தென்பட்ட புதிய நோட்டுக்களைக் கண்டதும் "மிஸ்டர் சங்கரன்! இது உங்களுடைய பணமா என்பதைக் கூறமுடியுமா?" என்று வினவினர்,

அவைகளை உற்று நோக்கிய சங்கரன், "ஹா...என்... ஆமாம்...என்னுடையதேதான். நேற்றுதான் பாங்கிலிருந்து மாற்றிவந்தேன். ஒரு கத்தையில் அடித்த பின்கூட அப்படியே இருக்கிறது பாருங்கள் இன்ஸ்பெக்டர். நோட்டின் எண்ணும் வரிசையாக இருக்கிறதே" என்று வியப்பு மேலிட உரக்கவே வேகமாகக் கூறினர். உடனே உள்ளே ஓடிச்சென்று மேஜை டிராயரிலிருந்து ஒரு சிறிய குறிப்புப் புத்தகத்தை எடுத்துவந்து முன்தினம் குறித்து வைத்திருந்த எண்ணையும் ஒப்பிட்டார். சங்கரன் பணம் என்பது ருசுவாகிவிட்டது.

பிறகு, கைக்குட்டையை மேலும் கீழும் திருப்பினர். ஒரு மூலையில் தென்பட்ட (K. A.) கே. ஏ. என்று ஆங்கிலத்தில் குறிப்பிட்டிருந்த வண்ணன் குறி அவரது நயனங்களில் தடு பட்டது.

"ஸார்! உங்கள் வீட்டு வண்ணன் குறி என்ன?" என்ருர் சங்கரனிடம்.

"வண்ணன் குறியா? (C. S.) ஸி. எஸ். என்ற இரண்டு எழுத்துதான். ஏனென்ருல்...என் பெயர் ஸி. சங்கரன். இதோ பாருங்கள் என் சட்டையில்..." என்று குறியையும் காட்டினர்.

"ஓஹோ!" என்ற ரவீந்திரன் கையிலிருந்த பென்ஸிலால் தலையை ஒரு தட்டு தட்டி தன் மூளையை சாணைபிடித்தார்.

'இது சங்கரன் வீட்டு கைக்குட்டையில்லை...ஹூம்...இது வும் ஒரு நல்லதிற்குத்தான். இதைக் கொண்டே குற்றவாளி யைக் கண்டுபிடித்து விடலாமே...ஆனல்...உலகத்தில் எத்தனை கே. ஏ. என்று பெயருடையவர்கள் இல்லை' என சிந்தித்த அவர் நேரம் துரிதமாகக் கடப்பதை அறிந்து தலையை நிமிர்த்தினர். அவர் பார்வை அனுஷாவிடம் சென்று நிலைத்தது.

அவள் முகம் வெளிறிக் கிடப்பதையும், அவளது நேத்திரங் களில் இழையோடும் கிலியையும் கண்ணுற்ற இன்ஸ்பெக்டர் நிமிட நேரம் திடுக்கிட்டார். உடனே அவரது நீண்ட புருவங்கள் மேல்நோக்கி சிந்தனையோடு வளைந்தது. அனுஷாவை உச்சந் தலை முதல் உள்ளங்கால் வரை ஒருமுறை நோக்கினர். அவளது புடவைத் தலைப்பின் ஒரு மூலையில் தென்பட்ட வண்ணன் குறி கூர்மையான பார்வையுடைய அப் போலீஸ் புலியின் கண்களில் சிக்கத் தவறவில்லை. துணுக்கென்றது அவர் நெஞ்சம். கைக் குட்டையிலிருந்த குறியையும், புடவைக் குறியையும் மாறி மாறி கண்ணோட்டம் விட்டார். என்ன ஒற்றுமை! இரண்டிலும் ஒரே மாதிரியான கே. ஏ. என்ற அறிகுறி!

அனுஷாவின் உடல் வெடவெட வென்று நடுங்கியது. கண்கள் இன்ஸ்பெக்டரை நிமிர்ந்து நோக்கக் கூசின. நகத்தால் தரையைக் கீறியவாறு நின்ருள்.

திடீரென்று, "ரைட் சார்...நான் இந்த வீட்டிலுள்ள ஒவ் வொருவரிடமும் தனித்தனியாகப் பேச விரும்புகிறேன்" என்று

எல்லோர் முன்னிலையிலும் கூறிவிட்டு, முதலில் அனுஷாவை அழைத்தார். சிறிது தூரத்தில், தாழ்ந்த குரலில், தன் உத்யோகத் தன்மைக்கு ஏற்ப கேள்விகளை விடுத்துக் கொண்டிருந்தார்.

அவர் வாய் கேள்விகளை விடுப்பதும், அவர் செவி அனுஷா கூறுபவற்றை கிரகிப்பதுமாக தன் வேலையைச் செய்து கொண்டிருந்தனவே தவிர, அவர் மனமோ எங்கெங்கோ தாவி சுற்றியலைந்து சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தது.

'என்ன! இது அனுஷாவின் கைக்குட்டையா? அதில் சங்கரனின் பணம். அப்படியானால் அனுஷாதான் குற்றவாளியா?... அப்படியும் நினைக்க முடியவில்லையே. அவள் இக் களவை செய்திருந்தால்...ஏன் அவளே அக்கறையோடு போன் செய்கிறாள்? நம்மை வரும்போது இன்முகத்தோடு வரவேற்றாளே...மனதில் ஒரு கலக்கம் இருந்தால் அப்படி செய்ய முடியுமா? மேலும் இத் தகாத செயலுக்கு அவள் ஈடு அற்றவள் என்று பால் வடியும், கள்ளம் கபடறியாத அவள் முகம் பறைசாற்றுகின்றதே......இதென்னடா குழப்பம்...ஒரு வேளை...இவள்தான்...சே...சே...தீர விசாரிக்காது யாதொரு முடிவுக்கும் வரக்கூடாது...மேலே கவனிப்போம்' என்று தீர்மானித்து மனநிலையை ஒருவாறு சமாளித்துக்கொண்டு பேசினார்.

"ஏனம்மா! இது உங்களுடைய கைக்குட்டைதானே?" என்று இன்ஸ்பெக்டர் கேட்டார்.

இந்தக் கேள்வி அனுஷாவை அப்படியே அம்பு போல் துளைத்தது. தன்னைத் தனியே விசாரிக்க அழைத்ததிலிருந்து எந்த நிமிடம் கைக்குட்டைபற்றி பேச்சு எழுமோ என்று நடுங்கிக் கொண்டிருந்ததற்கு ஏற்ப அவர் கேட்டதும், சமூகமே அவளைத் திருடி, மோசக்காரி, நம்பிக்கைத்ரோகி, உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினைக்கும் சதிகாரி என்று பலபேர் ஏககாலத்தில் இடித்துக் கூறுவதுபோல் இருந்தது. கண்களில் நீர் பொங்கி திரையிட்டது.

"ஆ...ஆமாம்...அது என்னுடைய கைக்குட்டைதான்...ஆனால்...இன்ஸ்பெக்டர் சார்......நான் நிரபராதி...இதுபற்றி ஒன்றும் அறியமாட்டேன். இவர்கள் பெண் போல் வளர்ந்து விட்ட நானா, அவர்களுக்குத் தீங்கிழைப்பேன்? இக் கைக்குட்டை...எப்படி இங்கு வந்தது என்று என்னால் நினைக்கக்கூட முடியவில்லை. ஸார்...என்...இந்த இழைபின்ன கைக்குட்டையை யாருக்குக் கொடுத்தேன்?......ஆ...ஆ...இது...ஒரு நாள்...ஒரு மாதத்திற்கு முன்—நான் நடன ஆட்டத்திற்குச் சென்றிருந்தேன்...அங்கு...அவள் பெயர்?...பெயர்..." என்று ஒரு பெண்ணின் மறந்துவிட்டப் பெயரை நினைவுக்கு வரச்செய்ய அனுஷா, ப்ரயத்தனம் செய்து கொண்டிருந்தபோது, ரவீந்திரன் கொண்டு வந்திருந்த துப்பறியும் நாய் அதிகமாகக் குரைத்து அவரது கால் சட்டையைப் பிடித்து இழுக்க ஆரம்பித்தது.

'அனுஷாவிற்கும், இந்தக் கேஸிற்கும், சம்பந்தம் இருக்கவும் இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம். ஒருவேளை இவளால்

இந்த கேஸைக் கண்டுபிடிக்க உதவியும் ஏற்படலாம். அதனால் என் உத்யோகமும் உயர்வு ஏற்படும். இவள் உண்மைக் குற்றவாளியாய் இருந்தாலும், ஒரு பெண்தானே. அதுவும் இவ் வீட்டிலேயே குடியிருப்பவள். தப்பி ஓட முயற்சிப்பாளா' என்றெண்ணிய ரவீந்திரன், "அம்மா! நீ நிரபராதி என்று கூறுகிறாய். வீட்டுக்காரரும் உங்களை பூரணமாக நம்பியிருப்பதாக பகிரங்கமாகக் கூறுகிறார். ஆனால் நான் அப்படி எப்படி எளிதில் நம்பிவிட முடியும்? திருட்டு போன ரூபாய், உன் கைக்குட்டையில் இருப்பதே ஒரு சாட்சி. சூழ்நிலை உன்னைக் குற்றவாளியாக்குகிறது. அதனால் உன்னை சந்தேகிக்கிறேன். எந்த குற்றவாளியும் தன் தவறை ஒப்புக் கொள்வார்களா? ஆனாலும் உனக்கு சில நாள் அவகாசம் கொடுக்கிறேன். அதற்குள், அந்தக் கைக்குட்டை விஷயம், வேறு எதுவும் நினைவுபடுத்தி, மறைக்காமல் என்னிடம் கூறிவிட வேண்டும். நானும் வேறு துப்புகள் கண்டுபிடிக்க முனைகிறேன். ஆனால் இக் கைக்குட்டை விஷயம், உன் வீட்டிலும் உன்னைத் தவிர யாருக்கும் தெரிய வேண்டாம்" என்றார்.

அதற்குள், நாயின் தொந்திரவு அதிகமாகவே இன்ஸ்பெக்டர் நாயைப் பின்தொடர்ந்தார். அது முன்பு பணம் கொண்டு வந்த சாளரத்தின் அருகேயுள்ள கதவைத் தள்ளிக்கொண்டு, மொட்டை மாடியைக் கடந்து பின்புற படிகட்டுகளில் இறங்கி, கீழே ஓடியது. மண் தரையில் நடந்து, 'தெருப்பக்கமாக உள்ள—ஆனால் சற்று ஒதுக்குப்புறமாக உள்ள சிறிய கதவின் வழியாக தெருவில் தாவி குதித்தது. தெரு வழியாகவே, பல பெரிய வீதிகளையும், சிறிய சந்துகளையும் கடந்து ஓடிக்கொண்டிருந்தது. இரண்டு சிவப்பு தொப்பிகள் அதைப் பின்தொடர்ந்து வேகமாக ஓட, இன்ஸ்பெக்டர், ரவீந்திரன், ஜீப்பில் ஏறி அமர்ந்து அதைப் பின்னாலேயே வேகமாக ஓட்டினார்.

'இது என்ன? திருடியவன், ஒரு அதிசய திருடனாயிருப்பான் போலிருக்கிறதே. திருடியவன் பின்புற சுவர் தாண்டி குதித்து ஓடாது, வாயிற்பக்கம் கதவைத் திறந்துகொண்டு, சாவதனமாக தெருவில் நடந்து போயிருக்கிறானே' என்று அதிசயித்தார்.

அனுஷாவோ ஸ்தம்பித்து நின்று தெருவில் ரவீந்திரன் செலுத்தும் ஜீப்பையே பார்வையிலிருந்து மறையும்வரை பார்த்தவாறு நின்றிருந்தாள்.

'இன்ஸ்பெக்டர் வரும்போது கம்பீரமான அவாது உருவத்தைக் கண்டு, இந்த கலவர நிலையிலும் சிறிது நேரம் மெய்மறந்தேனே. என் மனதில் என்றும் அறியாத ஒரு கிளுகிளுப்பு ஏற்பட்டதே. ஆனால்...அத்தனையும் ஒருகணத்தில் பொடி சூர்ணமாகிவிடும் படியாகவல்லவா என்னை விதி இலக்காகியிருக்கிறது...சூழ்நிலை என்னை நிரபராதியாயிருந்தும் குற்றவாளியாக்குகிறதே. சிலநாள் அவகாசத்தில் கூறவேண்டுமாம்...எதை? ஒன்றும் புரியவில்லையே...அவருக்கு இந்த கேஸில் வேறு ஒரு துப்பும் கிடைக்கவில்லையென்றால்...ஐயோ! என்னைதான்...என் கையில்தான் விலங்கை மாட்டி இழுத்து செல்வாரா? நான் ஒரு

கைதியாகி விடுவேனா? கடவுளே! என் துன்பத்தைத் தீர்க்க உன்னையன்றி, எனக்கு வேறு துணையும் இல்லை...சாட்சியும் இல்லை'...என பலவாறு அவள் மனதில் ஓயாத அலை பொங்கி பொங்கி அடிக்கத் தொடங்கியது.

இதுவரை தன் சொத்திற்கு தலைமுழுகிவிட தீர்மானித்து சோர்ந்திருந்த சங்கரனும், நாயின் திறமையைக்கண்டு ஒருவேளை கிடைக்கலாமோ என்று சிறிது நம்பிக்கையடைந்து, தெம்பும் பெற்றார்.

மோப்பம் பிடித்துக்கொண்டே சென்ற நாய் ஒரு ப்ரபல நகைக் கடையின் வாயிலில் போய் நின்றது. இன்ஸ்பெக்டரும் கீழிறங்கி கடையருகில் ஆஜரானார். கடை பூட்டப்பட்டிருந்தது.

அதற்குள், தெருவில், நடமாடிக் கொண்டிருந்த ஜனங்கள் ப்ரேக் போட்டதுபோல் அயன்று நின்றனர். ஒன்றுமில்லாத திற்கே சேர்ந்துவிடும் ஜனங்கள், ஒரு பெரிய நகைக் கடையின்—அசோக் ஜுவல்லரியின்—முன்பு போலீஸ் ஆட்கள், அதுவும் துப்பறியும் நாயுடன் நின்றிருக்கும்போது கூட்டம் கூடுவதற்குக் கேட்கவா வேண்டும்?

கூட்டமாக இருந்த மக்கள் ஒன்றும் புரியாது பேசத்தொடங்கினர். இந்த சந்தடியைக் கிழித்தவாறு பேரிரைச்சலுடன், கார் ஒன்று வேகமாக வந்தது.

அதிலிருந்து, துல்லியமான, நாகரீக உடையணிந்த ஒருவன் இறங்கி வந்தான். அவன்தான் அக்கடையின் முதலாளி அசோகன். காலையில் கடையைத் திறப்பதற்காக வழக்கமாக வரும் நேரத்திற்கு வந்த அசோகன், தன் கடையின் வாசலில் ஏராளமான கூட்டம் நிற்பதோடு, போலீஸ் தலைகளும் தென்படவே ஒன்றும் புரியாதவனாய், கூட்டத்தை விலக்கிக்கொண்டு முன்னேறினான்.

கூட்டத்தில் கிசுகிசுப்பு அதிகம் ஏற்பட்டது. பல கண்கள் பலவிதமாக அவனை நோக்கின. ஊக்கத்தோடு அனைவரும் அசோகனையும், இன்ஸ்பெக்டரையும் மாறிமாறி பார்த்தனர்.

ரவீந்திரனிடம் நெருங்கிய அசோகன் மரியாதையோடு ஒரு வணக்கம் செலுத்திவிட்டு, "இன்ஸ்பெக்டர்! இது என்ன என் கடைவாசலில் இவ்வளவு கூட்டம். என்ன விஷயம்? இங்கு என்ன நடந்தது? என்றுமே என் கடையருகே இப்படி கூட்டம் கூடியதில்லையே" என்று படபடப்போடு வினவினார்.

அசோகனை உற்று கவனித்துவிட்டு, "ஓஹோ! நீங்கள்தான் இக்கடையின் அதிபரா?...வணக்கம்" என்றார்.

"ஆமாம்...நான்தான். என் பெயர் அசோகன்...இதெல்லாம்...என்ன சார்?" என்றார் மீண்டும்.

தொண்டையைக் கனைத்துக்கொண்ட ரவீந்திரன் "நேரு ரோட்டில் உள்ள, சங்கரன் என்பவர் வீட்டில் நேற்றிரவு களவு நடந்துவிட்டது. அதிக பெறுமானமுள்ள நகைகள் காணவில்லை. நாங்கள் அவர் வீட்டை பார்வையிட்டு கவனித்ததில் எங்கள் துப்பறியும் நாய் மோப்பம் பிடித்துக்கொண்டு இங்கு வந்து நிற்கிறது...அதனால் தங்கள் கடைமுழுவதும் நாங்கள் சோதனையிட

விரும்புகிறோம். முன்னெச்சரிக்கை யில்லாது இக்கஷ்டத்தைக் கொடுப்பதற்கு மன்னிப்பு...ஆனால் எங்கள் கடமை. கதவைத் திறவுங்கள்'' என்று சிறிது குழைவோடு அதிகாரமும் மிளிர விஷயத்தை விளக்கினர்.

''ஓ! அப்படியா?...இதற்கெதற்கு நீங்கள் மன்னிப்புக் கேட்க வேண்டும். உங்கள் தொழிலின்படி செய்ய உத்திரவிடுவது கடமைதானே. எனக்கு எந்த ஆக்ஷேபணையும் இல்லை...தாராள மாக கடை முழுவதும் பாருங்கள். மடியில் கனமிருந்தால்தானே மனத்தில் பயம். மேலும், எங்களிடம் யாராவது நகைகள் விற்க விலைகேட்கக் கொண்டுவந்தால் நாங்கள் சந்தேகத்தின் பேரில், அவை, செப்பா, பித்தளையா உண்மையான பொன்தானா? என்று எங்கள் சங்கையை நிவர்த்தி செய்யும் பொருட்டு, அவைகளை உறைகல்லில் உறைத்து பார்ப்பதுபோல், போலீஸ் இலாகாவில் உள்ள தாங்கள் சந்தேகத்தின் பேரில் வந்து என் கடையைச் சோதிப்பது முறைதானே அதில் தவறு என்ன இருக்கிறது. இதோ திறக்கிறேன் கதவை'' என்று சாந்தமாக உண்மை கருத்துக்கள் நிறைந்து பேசிய அசோகன், அந்தஸ்தில் உயர்ந்திருந்தாலும், அதிகாரத்தில் உயர்ந்திருந்த இன்ஸ்பெக்டர் ரவீந்திரனின் கட்டளைக்கு அடிபணிந்து கதவைத் திறந்தார்.

திறந்ததும், நாய் குபீரென்று உள்ளே பாய்ந்து மூலையாக இருந்த இரும்பு பெட்டியின்மேல் தாவி, பெரியதாகக் குரைத்து அப்பெட்டியைத் தனது நீண்ட நகங்களால் பிராண்டியது.

இன்ஸ்பெக்டர் வேகமாக அங்கு சென்றார். உடனே ''மிஸ்டர் அசோகன்! இந்த பெட்டியின் சாவியைக் கொடுங்கள்'' என்றார். அவசரமாக சட்டை பைகளில் தேடிய அவர் ''ஐயோ! காணவில்லையே. கொண்டுவர மறந்துவிட்டேனா?'' என்று யோசிப்பதற்குள், இன்ஸ்பெக்டர் கையை லேசாக வைத்து இழுக்கும்போதே அக்கதவு படீரெனத் திறந்து கொண்டது. அதனுள் நகைகள்! சங்கரன் கொடுத்த பட்டியலை எடுத்துப் பார்த்தார். அதில் அவர் கொடுத்திருந்த அடையாளப்படியே, சில நகைகள் இருந்தன.

சந்தேகத்தோடு முகத்தைத் திருப்பினர் ரவீந்திரன். தன் இரும்புப் பெட்டியில் நகைகளைக் கண்டதும் அசோகனுக்கு சம்மட்டியால் அடிப்பதுபோல் ஒரு வேதனை ஏற்பட்டது.

''ஹா...என்ன? நகைகளா?...திருட்டுப்போன நகைகளா?... எங்கே என் சாவி...யார் இரும்புப் பெட்டியைத் திறந்தது. எப்படி இங்கு இந்த நகைகள் வந்தன...எப்படி...எப்படி...யாரிடம் என் சாவி...'' என்று திணறியவாறு கூச்சலிட்டார்.

''அசோகன்! காணமற்போன நகைகள் உங்கள் கடையில் கிடைத்திருக்கிறது. அதனால் உங்களைக் குற்றவாளியாக்கி, கைது செய்கிறேன். இன்னும் மீதி காணமற் மறைந்த வஸ்துக்களுக்கும், இந்தத் திருட்டிற்கும் நீர் பொறுப்பாளியாகிறீர்...'' என்று இன்ஸ்பெக்டர் கூறிக்கொண்டே போனர்.

''ஸார்! இன்ஸ்பெக்டர்!...உங்களை வெகுவாகக் கேட்டுக் கொள்கிறேன். நான் உண்மையில் நிரபராதி. இதுபற்றி அணுவளவும் அறியாதவன் நான். இதில் ஏதோ சூது நடந்திருக்

கிறது. இத்தனை ஆண்டுகளாகக் கண்ணியமாக வியாபாரம் நடத்திவரும் நானா...சூழ்ச்சிக்கு பலியாக வேண்டும்?. ஸார்! என்னை நம்புங்கள்'' என்று இறைஞ்சி மன்றாடினார் அசோகன்.

ரவீந்திரனின் காதில் எதுவுமே விழவில்லை. கடமையிலேயேக் கண்ணாக இயந்திரம்போல் அசோகனின் கைகளில் விலங்கை மாட்டினார். வெளியிலிருந்த ஜீப்பிலும் இரண்டு போலீஸ்காரர்கள் அசோகனின் கையைப் பிடித்து ஏற்றினர்.

கடையிலிருந்து வெளிப்பட்ட துப்பறியும் நாய் ஒன்றும் புரியாது விழித்தது. அதற்குமேல் அதனால் மோப்பம் சரியாக தெரியவில்லை. அங்கேயே சிறிது நேரம் சுற்றிவிட்டு காரில் ஏறிக் கொண்டது.

பெட்டியிலிருந்த நகைகளை எடுத்துக்கொண்ட, இன்ஸ்பெக்டர் கடைக் கதவைப் பூட்டினார். அவர் மனம் இருதலைக் கொள்ளியாய் தவித்தது.

'என்ன இது! அனுஷா தான் குற்றவாளியில்லை என்கிறாள். அசோகன் தான் நிரபராதி என்கிறான். ஆனால்... அனுஷாவின் கைக்குட்டையில் பணம்!... அசோகனின் கடையில் நகைகள்!... அப்படியானால்...உண்மைத் திருடன் வேறு இருக்கிறானா? அவன் யார்? அதை நீதியறிந்து கண்டுபிடிக்கும் பொறுப்பு—கடமை என்னிடத்தில். அதனால் உத்தியோக உயர்வு. என்ன சிக்கலான வழக்கு?' என்று இப்படி எல்லாம் அவரைச் சுற்றிச் சுற்றி திணறடித்தன. இதற்கிடையில் வண்டியும் ஸ்டேஷனை நோக்கி பறந்துக் கொண்டிருந்தது. (தொடரும்)

<u>உண்மை சித்திரம்</u>

கப்பரை காசு

— உண்மை விளம்பி —

"ஒரு ஊசி நுழைய இடம் இருந்தால் ஒன்பது வடை தள்ளுவேன்'' என்று ஒரு சாப்பாட்டு ராமன் சொன்னானாம். அதுபோல் ஒரு சேர் போட இடம் இருந்தால் 10 பேரை உட்கார வைப்பேன். அதுதான் இல்லை என்று டிக்கெட் கலெக்டர் கர்வத்தோடு மொழிந்தான். எள்ளுப் போட்டால் எள்ளு விழாத கூட்டம்.

குறித்த நேரத்தில் நாடகம் தொடங்கியது. விறுவிறுப்பான நாடகம் ஜனங்களை ப்ரமிக்கச் செய்துகொண்டு இருந்தது. எனக்கு அப்போது எட்டு வயது, அனாயாஸமாய் எட்டு கட்டை ஸ்ருதியில் பாடுவேன். நான் ஏற்றது பிச்சைக்கார பெண் வேடம்தான். கையில் கப்பரை ஏந்தி, மற்றொரு கையில் கோல் பிடித்து குருட்டுக் கிழவனை தந்தைக்கு வழிகாட்டி பாடியவாறு அழைத்துவந்தேன். மேடையில் வந்து ஜனத்திரளைப் பார்த்ததுதான் தாமதம்; அந்தக் கூட்டத்தின் ஆரவார முழக்கம் என்னை புத்துணர்ச்சி ஊட்டி இன்னும் உருக்கமாய் பாடச்

செய்தது. என்னை மறந்து பாடினேன். ஹிந்தி மொழி தெரியாது. ஆனால் நடிப்பது ஹிந்தி நாடகம். தமிழ் தவறி வந்து விடுமோ என்று இடையில் பயம். முன் நாற்காலிகளில் ஹரிஜன நிதிக்குப் பணம் முடிப்பு பெற தற்போது ஜனாதிபதி பீடத்தை அலங்கரிக்கும் ராஜேந்திரப்ரசாத், சர்தார் படேல் இருவரும் என்னை கண் இமைக்காது பார்த்துக்கொண்டு இருந்தார்கள். எனக்கோ அவர்களிடம் புகழ்பெற ஆவல். அதன் விளைவு பாட்டை முடித்து மிகவும் உருக்கமாய் கண்களில் நீர்சோர, குருட்டு தகப்பனைக் காட்டி ஹிந்தி மொழியில் உணர்ச்சியுடன் பிச்சைக் கேட்டேன். விஷயம் அறிந்த அனுபவசாலியான என் தந்தை முதலில் ஒத்தை ரூபாய் நாணயத்தை மேடைமீது வீசி எறிந்தார். அவ்வளவுதான். பாரத நாட்டின் மண்ணில் ஊறிய நம் சகோதர, சகோதரிகளின் நெஞ்சம் பாகாய் உருகி விட்டது. அடுத்த விநாடி மேடையை நோக்கி நாணயமும், நோட்டுமாய் மழை பெய்ய தொடங்கியது.

அப்ப, என்ன அதிசயம். எனக்கு ஏற்பட்ட குஷியில் ஓடி ஓடி பணத்தை அள்ளி கப்பரையை நிரைத்தேன். ஒன்று, இரண்டு என்று வாத்தியார் ஏந்திய டவலில் கொட்டினேன். அவ்வளவுதான். சோர்வு ஏற்பட்டவுடன் கோபம் பீறியது. அவ்வளவு நேரம் குஷியாய் செய்த வேலை வேம்பாய்க் கசந்தது. விச்ராந்தி பெற உள் பெஞ்சியில் உட்கார்ந்தேன். இதைக் கவனித்த வாத்யார் "என்னம்மா உட்கார்ந்துவிட்டாய்! இன்னும் இந்த ஸீன் முடியவில்லையே...போ...போ..." என்றான். நான் கோபத்தோடு "போங்க சார்! கால் வலிக்கிறது என்னால் முடியாது" என்றேன். பாவம்! வாத்யாருக்குப் பயம் உதைக்கத் தொடங்கியது. பாவம், என்னைத் தடவிக் கொடுத்தவாறு "என் கண்ணு இல்லே...போம்மா. இன்னும் கொஞ்சம்தான் பணம் சிந்தி இருக்கிறது. அதை பொறுக்கிக் கொண்டு, குருடனை அழைத்துக்கொண்டு வா...போதும்" என்று கெஞ்சினார். மலை அசைந்தாலும் நான் அசையும் வழி ஏற்படவில்லை. பீதி அடைந்த வாத்யார் எங்கே ஓட்டம் எடுத்தார். அடுத்த க்ஷணம் என் தந்தையோடு ப்ரஸன்ன மாகிவிட்டார். என் தந்தையின் முகத்தைப் பார்த்ததுதான் எனக்கு நடுக்கம் எடுத்துக் கொண்டுவிட்டது. கோபத்தை அடக்கிய என் தந்தை சாந்தமாய் "கண்ணா போம்மா...குருடனை மட்டும் அழைத்துக்கொண்டு வந்துவிடு...இப்போது பார் ராஜேந்திர ப்ரசாத், படேல் உனக்குப் பரிசு கொடுக்கப் போகிறார்கள்" என்று ஆசையை மூட்டினார். அடுத்த க்ஷணம் கோபம் பஞ்சாய் பறந்தது.

உடனே பழைய உத்சாகத்தோடு மேடையை நோக்கி ஓடினேன். எனக்கு அளித்த வரை சிறப்பாய் நடித்தேன். என் தந்தை சொல்லியதுபோல் என் நடிப்பை பாராட்டி படேல் பேசினார், பாபு ராஜேந்திரப்ரசாத் எனக்குச் சில ஹிந்தி புஸ்தகங்கள் பரிசு கொடுத்தார். நம் பாரத நாட்டு ஜனாதிபதி கையால் பரிசு பெற்ற பாக்யத்தை இப்போது நினைத்தாலும் உள்ளம் பூரிக்கிறது. ❋

ஸம்சார சக்கரம்.

ஜயலக்ஷ்மி ஸ்ரீநிவாஸன்

நேஷனல் சேவிங்க்ஸ் ஸர்டிபிகேட்

"இதென்னடா இது! ஆடம்பர செலவு செய்யவேண்டாம். அனாவசிய சௌந்தரிய சாதனங்களுக்கும், சுகபோக வஸ்துக்களுக்கும், வெளி நாட்டு சாமான்களை வாங்குவதிலும் பணத்தை வீணாக செலவழிக்க வேண்டாம். அதற்கு பதில் அந்தச் செலவிலிருந்து மிகுந்த பணத்தில் நேஷனல் சேவிங்க்ஸ் ஸர்டிபிகேட்களை வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். எதிர் காலத்தில் உங்களுக்கு ஆகட்டும், உங்கள் குழந்தைகளுக்கு ஆகட்டும் இந்தப் பணம் சமய சஞ்சீவியாக உதவும்..." என்ற கூப்பாடு எல்லா இடங்களிலும் கேட்கிறது. "இவ்விதம் செய்வதால் நாட்டுக்குப் பேருதவி செய்தவர்கள் ஆவீர்" என்ற பேச்சுகேட்கிறது. "இதென்ன ஆச்சரியம்! நாம் நம் சொந்தக் காசை சேமித்து 'நேஷனல் சேவிங்க்ஸ் ஸர்டிபிகேட்' வாங்கி வைத்துக் கொள்வதால், நாம் நமது நாட்டுக்கு எவ்வாறு உதவி செய்தவர்கள் ஆவோம்? இது நல்ல வேடிக்கை!" என்று பல சகோதரிகள் சொல்வதைக் கேட்டிருக்கிறேன். ஆதலால் தான் இந்தக் கட்டுரையை எழுத ஆரம்பித்தேன்.

'பல துளி பெரு வெள்ளம்' என்ற பழமொழி போல், நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் பணத்தை சேமித்து, நேஷனல் சேவிங்க்ஸ் ஸர்டிபிகேட் வாங்கி வைப்பதால் நம் நாட்டு மக்களின் செல்வம் அனாவசியமான சுகபோக வஸ்துக்களுக்காக மேல் நாடுகளுக்குப் போவது நின்றுபோய், நம் நாட்டிலேயே தங்கி, நம் நாட்டு பொருளாதார நிலைமை மேன்மையுறும். அல்லாமல் நம் சுதந்திர இந்தியாவின் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தைக் காரிய உருவில் கொண்டு வருவதற்குக் கோடிக்கணக்கான ரூபாய்கள் தேவை. இதற்காக அரசாங்கம் மேன் மேலும் மேல் நாடுகளிலிருந்து கடன் வாங்குவதைத் தடுத்து, நாட்டின் செல்வத்தைக் கொண்டே நாட்டின் அபிவ்ருத்தித் திட்டத்தைச் சாதிப்பதற்கு நாம் உடந்தையாவோம். மற்றும் அர்த்தமில்லாத செலவுகளைச் செய்து பணத்தை வீணாக்கி விட்டு கடைசியில் ஒரு ஆபத்துக் காலத்தில் அல்லது கல்யாணம்—கார்த்திகை காலத்தில் கையில் பணமின்றி திண்டாடாமல் இருக்க, இந்த நேஷனல் சேவிங்க்ஸ் ஸர்டிபிகேட்டுகள் உதவும். இது போன்ற பல காரணங்களை ஆர அமர யோசித்து விட்டுதான் நம் இந்திய அரசாங்கம் நேஷனல் சேவிங்க்ஸ் சர்டிபிகேட்டுகளை பொது மக்கள் இப்படி வாங்க வேண்டும் என்று பிரசாரம் நடத்தி வருகிறது. இந்த நல்ல காரியத்தில் உதவக் கூடியவர் பெண்கள் தான். கணவன் சம்பாதித்து வந்து கொடுத்த பணத்தைத் தகுந்தபடி செலவழிக்க வேண்டிய மற்றும் சேமிக்க வேண்டிய பொறுப்பை மனைவி தானே

183228

ஏற்றுக் கொள்கிருள். இந்த நல்ல காரியத்தில் உதவுவதற்கு முன்வரும் சகோதரிகளுக்கு எனது யோசனை சில:—

1. வேண்டியபடி புடைவைகளும், ரவிக்கைகளும் இருந்தாலுங்கூட புதிய மோஸ்தர் புடைவையொன்றைக் கண்டதும் மனதைப் பறிகொடுக்காமல் கட்டுப் படுத்திக்கொண்டு அதற்குச் செலவழிக்கவிருந்த பணத்தைக் கொண்டு நேஷனல் சேவிங்க்ஸ் ஸர்டிபிகேட் ஒன்று வாங்கி வைப்போம் என்று தீர்மானம் செய்யுங்கள்.

2. வாரந்தோறும் சினிமாவுக்குப் போய் வந்துப் பணத்தைக் கரியாக்குவதில் என்ன பயன்? ரொம்ப நல்ல படமாக விருந்தால் போய் பார்த்து விட்டு வந்தால் போதும். ஒவ்வொரு சித்திர மாறுபாட்டிற்கும் போய் வருவதை நிறுத்திக் கொண்டு, அந்தச் செலவில் மாதம் ஒரு நேஷனல் சேவிங்க்ஸ் ஸர்டிபிகேட் வாங்கிவிடலாமே! சமய சஞ்சீவியாயிற்றே. நாட்டுக்குக் கடுகளவு சேவை புரிந்த புண்ணியமும் உண்டு என்று மனதை உறுதிப் படுத்திக்கொண்டு இந்த நல்ல உபதேசத்தை உங்கள் குழந்தைகளுக்கும், கணவருக்கும் செய்வீருக.

3. பண்டிகை பருவம் வந்தால், ஏன் இப்படி இடுப்பை ஒடித்துக்கொண்டு பத்து வகை பக்ஷணங்கள் செய்ய வேண்டும்? வீண் செலவுமன்றி, வீட்டில் எல்லோருக்கும் வயிற்று வலி, அஜீர்ணம், வயிற்றுப் போக்கு. டாக்டர் (Bill) பில்லைப் பாருங்கள்! அடேயப்பா!! நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள். இந்தத் தொந்தரவுகள் எல்லாம் எதற்கு? ஒன்றுக்குப் பத்து மடங்கு விலைவாசி ஏறி இருக்கும் இந்தக் காலத்தில் பண்டங்களை மிதமிஞ்சி வாங்கிப் பாடுபட்டு சமைத்து சாப்பிட்டு விட்டு அனுரோக்கியத்தை வாங்கிக் கொள்வானேன். பேசாமே தினப்படி சமையலுடன் கூட பண்டிகைக்கு என்று இரண்டொரு முக்கிய தினுசுகளை மாத்திரம் பக்குவம் செய்து மிதமாகச் சாப்பிடுங்கள். பண்டிக்கைக்கு என்று அதிகப்படி செலவழிப்பதாக இருந்தப் பணத்தைக் கொண்டு நேஷனல் சேவிங்க்ஸ் ஸர்டிபிகேட் ஒன்று வாங்கி விடுங்கள்!

4. நீங்கள் வசிக்கும் ஊரிலிருந்து வெகு தூரத்தில் உள்ள ஊரில் உங்கள் நெருங்கிய உறவினரின் கல்யாணம் என்ருல் ரயில் சார்ஜு செலவழித்துக்கொண்டு கல்யாணத்துக்குப் போவானேன்? பணச் செலவுடன் கூட தேக சிரமமும் தான். இதற்குப் பதில் அந்தச் செலவைக் கொண்டுக் கல்யாணப் பெண்ணின் பெயரில் ஒரு நேஷனல் சேவிங்க்ஸ் ஸர்டிபிகேட் வாங்கிப் பரிசாக அனுப்பிவிடுங்கள். இந்த அரிய ஆலோசனையை உங்களுடைய உற்ருர் உறவினர்களுக்கும் தெரிவியுங்கள். இது போன்ற இன்னும் எவ்வளவோ வழிகள் உண்டு. நீங்களே கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தால் புலப்படாமல் போகுமா?

—✻—

அவள் எதை எதிர்பார்த்தாளோ, அவன் அந்தப் பேச்சை எடுக்கவேயில்லை. மாறாக, அவளைப் பக்கலில் இருத்தி, தானும் அமர்ந்து, அவளது தந்தையின் பெருந்தன்மை, சில குணங்களைப் பற்றி பாராட்டிக் கொண்டிருந்தான். ஜயலட்க்ஷிமி தணலிடைப் புழுப் போல—வெட்டிப் போட்ட மீனைப் போல துடித்தாள்...

"ஜயா! அடுத்த வாரம் ஒரு 'ட்ரிப்' அங்கே போய் வருவோமா?" என்று அவன், அவள் முகத்தோடு தன் முகத்தைப் பதித்தபோது அவளது மெய் சிலிர்க்கவில்லை, நடுங்கியது.

"கடவுளே! புனிதமான இந்த அன்புக்கு என்னை தகுதியுடையவளாகச் செய்ய மாட்டாயா?" என்று நெஞ்சோடு புலம்பினாள்.

அவளதுமுகத்தை நிமிர்த்திய சந்திரசேகரன், "ஜயா! இதென்ன மறுபடியும் உன் கண்களில்...?" என்றான்.

"ஆனந்தக் கண்ணீர்" என்று சிரித்தாள். ஆனால், அவள் நெஞ்சோ அவளை வாள் கொண்டு அறுத்தது.

சந்திரசேகரன் படுத்து நிம்மதியாக உறங்கிவிட்டான். ஆனால், ஜயலட்க்ஷிமியின்மீது நித்திரா தேவியின் கடைக்கண் பார்வைகூட படவில்லை. தலையணைமீது தலையைப் புரட்டிப் புரட்டி தலை கனத்தது. புரண்டு, புரண்டு உடல் வலி எடுத்தது. சிந்தித்து, சிந்தித்து மூளை குழம்பியது. நடக்கக் கூடியதும், கூடாததுமான எண்ணங்கள், குண்டூசி போல கணந்தோறும், குத்திக் குத்தி, மனதை சித்திரவதை செய்தது.

"நல்ல வேளை. இன்று இவர் பிரஸ்தாபிக்கவில்லை. நாளை, ஒரு வேளை, இவரோ, மாமாவோ அந்தப் பிரஸ்தாபத்தை எடுத்தால்......எடுத்தால்...ஏன் இந்த வேதனைப் படவேண்டும்! கணவனிடம் உண்மையை கூறிவிட்டால்... ஆம்... அவரது பெருந்தன்மையான உள்ளம்...மன்னித்துவிடும்...அவர் தன் தந்தையிடமே, "சே! அவமானம் அப்பா!" என்று கூறவில்லையா!...ஆம்...உண்மையை உரைத்துவிட வேண்டியதுதான்...அவர் என் மானத்தை மாத்திரமன்று...என் தந்தையின் மானத்தையும்...காப்பாற்றிவிடுவார்....ஆம்....அதுதான் சரி...தன் தந்தை வரைக்கும் கூட எட்டவிடாமல் மறைத்து விடுவார்...ஏதேனும்...மார்க்கம் தேடுவார்... ஆனால்...கடவுளே!...அப்புறம்...அந்தக் களங்கமற்ற அன்பு ஹிருதயம், என்னை எவ்வாறு மதிக்கும்..."பொய்யள்...கபடி...சூதுக்காரி..." என்று தாழ்த்தி மதிப்பிட்டு விடாதா...சே!...அதைவிட.... அந்தத் தூய அன்பின் மாற்று குறைவதற்குள்...இந்த அவல வாழ்வை முடித்துக் கொண்டால் என்ன...!...ஏ! கோழை மனமே! ஒன்று உண்மையை உரைக்கும் செயலில் இறங்கு அல்லது செத்து மடி..."

★மூவாயிரம் ரூ. செக்★

டி. வி. கே. மல்லிகை சுந்தரம்

—★—

சிந்தனைக்கும் ஒரு முடிவு உண்டல்லவா. அவள் தீர்மானமான ஒரு முடிவுக்கு வந்த பின், மனதில் சாந்தி ஏற்பட்டது. இமைக் கதவுகள் லேசாக மூடிக் கொண்டன.

அலாரம் கடிகாரம் விடியற் காலை ஐந்து மணி கால அறிவிப்பு செய்ததும், சந்திரசேகரன் வழக்கம்போல் துயிலெழுந்து, விளக்கைத் தட்டி தன் மனைவியின் முகத்தைப் பார்த்துவிட்டு தேகப் பயிற்சி செய்வதற்காக மொட்டை மாடிக்குச் சென்றான். அவன் மனைவி வந்த நாள் தொட்டு, எழுந்ததும் தன் மனைவியின் முகத்தில் விழித்து விட்டுத் தான் மற்ற தினசரி அலுவல்களில் ஈடுபடுவான். ஒரு நாள் ஆவலை அடக்க முடியாமல் ஜயலட்சுமி காரணம் கேட்டே விட்டாள்.

"அன்பு, அழகு, தூய்மை இம் மூன்றையும் ஆராதிப்பவன் நான். இம் மூன்றின் சங்கமம் என் ஜயா. ஆகையால் நான் எழுந்ததும் அவள் முகத்தில், விழிப்பது ஆச்சர்யமல்லவே" என்றான்.

"ஒரு மாதங்கட்கு முன்பு", அவள் கொஞ்சலாகக் கேட்டாள்.

அவன் மேஜை ட்ராயரிலிருந்து மூன்று சித்திரங்களை ஒன்றுசேர்த்து(சட்டம்)போடப்பட்ட ஒரு படத்தை எடுத்துக் காண்பித்தான். ஒன்றில் 'கன்றுக்குப் பாலூட்டும் பசு'வின் சித்திரம் அதற்குக்கீழ் 'அன்பு' என்று வரையப்பட்டிருந்தது. அடுத்தது 'மலர்ந்த ரோஜா'. அதன்கீழ் 'அழகு' என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

'தூய்மை'க்குச் சான்றாக 'ஸ்படிகக்கல்' ஒன்று வரையப்பட்டு, அதற்குள் இவ்விரண்டு சித்திரங்களும், பிரதிபலிப்பதாக சித்திரம் தீட்டப்பட்டிருந்தது. அவள் மனம் தன் கணவனின் மதி நுட்பத்தை எண்ணி பெருமிதம் கொண்டது.

அகத்தூய்மையுள்ளார் மாட்டுதான், அழகும், அன்பும் மங்காது பிரகாசிக்கும்", என்று விளக்க உரைவேறு கூறினான் அவன்.

"ஆனால், அவள் அதற்கு தகுதியானவள் தானா?..." இல்லை... இல்லை...எத்துக்காரி ஏமாற்றுக்காரி... இப்பொழுது அவள் வாழும், வாழ்வு பொய் வாழ்வு...வெறும்நடிப்பு..ஆத்ம சமர்ப்பணம்...இதில் எங்கே இருக்கிறது. இதற்கு ஒரு முடிவு கட்டத்தான் வேண்டும். இத்தனை நாள், அந்த அன்புருவை ஏமாற்றிய குற்றத்திற்காக கட்டாயம் நான் பிராயச்சித்தம் செய்துகொள்ளத்தான் வேண்டும்."

அவள் கண்கள் 'பொலபொல'வென்று நீரைச்சிந்தின. 'பரபர' வென்று தனது தந்தைக்கு ஒரு காகிதம் எழுதி, அதில், அந்த செக்கையும் வைத்து, கவரை ஒட்டினாள். அதற்கப்புறம்தான் அவள் மனம் லேசாகியது.

சந்திரசேகரன் அலுவலகம் செல்லும் சமயம் அவள் அக்கடிதத்தை தபாலில் சேர்க்கும் படி அவனிடம் கொடுத்தாள். 'மோட்டார்பைக்' கண் மறையுமட்டும், அவள் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, பிறகு தன் அறைக்குச்சென்று, தனது மன உணர்ச்சிகளைத்தை

யும் கொட்டி கடிதமெழுதி வைத்தாள். ஆனால், ஏனே திர்மானத்தை அமுலுக்குக் கொண்டுவரும் வேளை நெருங்க, நெருங்க, அவளது மனம் துணியவில்லை...அவர் மாலை நான்கு மணிக்குமேல் தானே திரும்புவார்...அதற்குத்தான் இன்னும் ஐந்து மணி அவகாசம் இருக்கிறதே... திர்மானத்தை ஒத்திப்போட்டாள், சில மணி நேரங்கட்கு.

தனது கலவரத்தை மற்றவர்கள் கவனியாமல், இருக்க வேண்டி, எப்பொழுதும்போல தினசரி அலுவல்களில் ஈடுபட்டாள். சாப்பிட்டதாக பேர் பண்ணி இலைமுன் அமர்ந்து எழுந்தாள். தன்னறைக்கு வந்தாள். ஒரு மாதிரியான பதபதைப்பு தேகமாத்யந்தமும் குலுக்கி எடுத்தது. அவளது கண்கள், கெடிகார முட்களின் மேலேயே பதிந்துகிடந்தன. மணி இரண்டு.. ஐயோ! கோழை மனமே!...என்னை கைவிட்டு விடாதே!...மானம் போனபின் வாழ்மை முன்னினிதே அன்றே!...இன்னும் இரண்டரை மணிநேரம்...இப்படியே போய் விட்டால்... அவர்... அவர்... வந்துவிடுவார்...வந்துவிடுவார்...

நடுங்கும் கரங்களால், அவள் வைரத் தோட்டை கழற்ற எத்தனித்தபோது 'மோட்டார் பைக்'கின் ஒலி கேட்டது. அவளது சப்தநாடியும் ஒடுங்கிவிட்டது. பூட்சின்ஒலி வந்து காதில் மோதுமுன்பே அவன் அறைக் கதவை 'படார்' என திறந்து கொண்டு, இரைக்க, இரைக்க அவள்முன் ஆண்மையின் கம்பீரத்துடன் நின்றான். சில விநாடிகள் அசாதாரண மௌனத்தில் கழிந்தன. பின் இருவருமே சமாளித்துக் கொண்டனர்.

"பூட்சைக்கூட கழற்றாமல் உள்ளே வந்துவிட்டீர்களே!" என்று அவன் முகத்தை நிமிர்ந்து நோக்கி முறுவலித்தாள்.

'உஸ்...அப்பாடா' என்றவாறே கைக்குட்டையால் முகத்தையும், பிடரியையும் துடைத்துக்கொண்டே, தன்னை ஆஸ்வாஸப்படுத்திக் கொண்டான்.

"ஆமாம்... ஐயா!...மறந்துவிட்டேன்", என்றவாறே அவளை அர்த்த பாவத்துடன் நோக்கி புன்னகை செய்துவிட்டு அறையை விட்டகன்றான்.

"ஏது இன்று ஆபீஸில் அரைநாள் லீவா அண்ணா? நீ 'செல்வா பாங்க்' காஷியராகப் போகப்போகிறாயாமே!" என்று கேட்டுக்கொண்டே அவனைப் பின் தொடர்ந்தாள் தங்கை ஜானகி.

"ஆமாம் ஜானி! இனி உன் அண்ணா கையிலே, ரூபாயும், நோட்டும் லக்ஷம் லக்ஷமாகப் புரளப் போகிறதாக்கும்."

"புரளும்... புரளும்... வெறும் நாக்கு புரளும்..." தமையனை தங்கை பரிகஸித்தாள்.

ஜயலக்ஷ்மியின் தேகமாத்யந்தமும், குபீரென்று வியர்வைவெள்ளமாகப் பொங்கியது. அவள் எந்த விஷயத்தை எடுக்கவே அஞ்சுகிறாளோ, கூசுகிறாளோ, அதுவே மீண்டும், மீண்டும் பேச்சில் அடிபட ஹேதுவாகியது. "ஒருவேளை அந்த செக்கை வாங்கிப்போகத்தான் அவர் அகாலத்தில் வந்திருக்கிறாரோ!" வேங்கை துரத்தும் மானைப்போல அவள் அவ்

வறையிலிருந்து ஒட்டமாக நடந்தாள் பின்கட்டை நோக்கி.

குனிந்து பூட்சை கழற்றிக் கொண்டிருந்த போதிலும், அவனுடைய திருஷ்டி அறைப் பக்கமாகவே இருந்தது.

"ஜயி! கொஞ்சம் 'ஐஸ் வாட்டர்' கொண்டு வா!'' தடை கட்டிய நாகம் போல நின்று விட்டாள் ஜயலட்சுமி.

அவள் கொண்டுவந்தளித்த ஐஸ் வாட்டரை, பருகிவிட்டு கிளாசை அவள் கரத்தில் கொடுக்காமலேயே, முகத்தைப் பார்த்து மோகனமாக முறுவலித்தான்.

அவளது மனம் ஏனோ ஆயிரம் மைல் வேகத்தில் அடித்துக்கொண்டது.

"ஜயி!'' ஒருகையால் அவள் முகத்தை நிமிர்த்தினான். "இங்கே வந்து உன்னைபார்த்த பிறகுதான் எனக்கு உயிர் வந்தது, ஜயி!'' அவன் குரல் தழுதழுத்தது.

அவள் கலவரத்துடன் அவனைப் பார்த்து விழித்தாள். "ஜயி! என் ஜயி! பகவான் என் பங்கில் இருந்தார்......அவன் அவளை ஒருகையால் அணைத்தவாறே, மற்றொரு கையால் தன் கோட் பாக்கெட்டில் கையை விட்டு அவள் காலையில் கொடுத்த அந்த கடிதத்தை எடுத்து மேஜைமீது போட்டான்.

"ஜயலட்சுமிக்கு அவன் அகாலத்தில் வந்த காரணம் புரிந்து விட்டது. "பிரித்துப் பார்த்திருக்கிறார்.'' அவமான உணர்ச்சி, அவளது உடலை குன்றச் செய்து விட்டது.

அவன் தீக்குச்சியை பற்ற வைத்து, அதில் அந்த மூவாயிர ரூபாய் செக்கைப் பிடித்தான்.

"ஐயா! உனக்கு வருகிற அவமானம் எனக்கில்லையா! உன் அப்பாவுக்கு எழுதியிருந்தாயே "பெண்கள், பிறந்த குலத்திற்கும், புகுந்த குலத்திற்கும், பெருமையளிக்க வேண்டுமேயன்றி சிறுமை அளிக்க அல்ல. ஆகவே, அப்பா, இந்த செக்கை இத்துடன் திருப்பி அனுப்பியிருக்கிறேன். என் வாழ்வையும் இன்று முடித்துக் கொள்ளப் போகிறேன்,'' என்று. ஏன் ஜயி! என்னை நீ நம்பவில்லையா? உம்......இந்த ஒரு மாதமாக மனதிற்குள் வைத்துக்கொண்டு எத்துணை வேதனைப்பட்டாயோ!...என்னை நிரந்தரமாக துன்பக் கடலில் ஆழ்த்திவிட்டுச் செல்ல உனக்கு எப்படி மனம் துணிந்தது ஜயி!... என்... ஜயி......'' அவள் அவனது அகன்ற மார்பில் தலையை புதைத்துக் கொண்டு கதறியேவிட்டாள். முதுகைத் தடவியவாறே அவளை ஆஸ்வாஸப் படுத்தினான். அக்கணம், உலகத்தின் அமைதி எல்லாம் தன்னை வந்தடைந்தது போன்ற நிலையை அடைந்தாள் ஜயலட்சுமி.

"இதோ பார்'', என்று அவன் தனது மற்றொரு பாக்கெட்டிலிருந்து இன்னொரு செக்கை எடுத்து அவள் கையில் கொடுத்தான். லாட்ரிசீட்டில் அவனுக்கு முதல் பரிசு மூவாயிரம் ரூபாய்க்கு செக் வந்திருந்தது.

"இந்த செக்கை பாக்கெட்டில் வைக்கும் போதுதான் உன் கடிதம் தட்டுப்பட்டது.

'தபாலில் போட மறந்து விட்டோமே', 'நீ என்னதான் எழுதியிருக்கிறாய் பார்ப்போமே' என்று உறையை மெல்ல பென்சிலால் பிரித்துப் பார்த்தேன். எனக்குப் பாதி உயிர் அப்பொழுதே போய்விட்டது. பைத்தியக்காரன்போல, மோட்டார் பைக்கைப் போட்டுக்கொண்டு, தலைதெறிக்க ஓடி வந்தேன். அந்த சில நிமிடங்களில் நான் பட்ட நரகவேதனை ...அப்பப்பா! என் சத்துருக்குக்கூட வேண்டாம்''.

"என்னை நீங்கள் வெறுக்கவில்லையா?''...ஜயாதேம்பினாள்.

"உன்னை வெறுப்பதா ஜயி!''

"அன்று புக்ககம் வரும்போது, அப்பா, "என் மானம், கௌரவம் எல்லாம் உன் கையில் தானிருக்கிறது. ஒரு மாதம் வரைக்கும் செக்கை மாற்றாமல் எப்படியாவது நாட்களை கழித்துவிடு. அதற்குள் நான் எங்கேனும் முயன்று பார்க்கிறேன்'' என்றார். நான் எத்தனையோ முறை உங்களிடம் உண்மையைக் கூற முயன்றேன். ஆனால், அப்பாவின் வேண்டுகோள் என் நாவைக் கட்டிவிட்டது. அதற்குமேல் அன்பும், தூய்மையும், நேர்மையும் கொண்ட ஓர் நெஞ்சத்தை ஏமாற்றுகிறோமே என்ற உணர்ச்சிவேறு என்னை அணு அணுவாக சித்திரவதை செய்துகொண்டிருந்தது...''

"இப்போது.......!'' அவன் அவள் கன்னத்தை செல்லமாக பிடித்து இழைத்தான்.

"புத்தி வந்தது. ஆனால் அப்பாவிடம் என்ன கூறி சமாளிக்கப் போகிறீர்களோ!'' அவள் அவனை ஏறிட்டுநோக்கி மோகனமாக புன்னகை செய்தாள்.

இந்த செக்கை மாற்றி நாளையே காஷியர் வேலைக்கு 'டிபாஸிட்' கட்டிவிடப் போகிறேன். அப்பா கேட்டால் உன் பணம் என்று சொல்வேன்.

"ஒரு நாள் உண்மை வெளிப்பட்டுவிட்டால்...?''

"நான் சொல்வது முற்றிலும் உண்மை. அந்த செக் யார் பெயருக்கு வந்திருக்கிறது பார்!''

செக் அவள் பெயருக்குத் தான் வந்திருந்தது. அவள் பெயரால்தான் அவன் போட்டிக்கு கூபன்கள் அனுப்பினான். நல்ல வேளை 'கேர் ஆப்' போஸ்டு அலுவலக விலாசம் கொடுத்திருந்தால்... ஜயாவின் கண்கள் ஆச்சர்யத்தால் மலர்ந்தன.

"ஆகையால் இது உன் பணம் தானே ஜயா!''

அவள் கண்கள் கணவனை கனிவுடன் நோக்கின. அவளுடைய இதயப்புள், "நாயகர் பசுமடி உனக்கது ஆயிரம் லக்ஷமடி'' என்று இசைத்துக்கொண்டிருந்தது. ❋

புதிய பாடம்

"பெண்ணுக்கு கல்யாணம் நிச்சயமாய்விட்டதாமே... வரதக்ஷிணை எவ்வளவு?

"ஊம்...வரதக்ஷிணையா என் கை விட்டுபோர தக்ஷிணை தானே...அது போய் சேர்ந்தாச்சு... 4000...இதோ பார் இனி பிள்ளை வீட்டாரை கேட்டா வரதக்ஷிணை என்றும் ...... பெண் வீட்டாரை கேட்டால் போர தக்ஷிணை என்றும் கேளும்.

காளிதாசர் கனவு.

13, சர்வதேவ தேவி தர்சனம்:

ஸ்ரீ கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்த்திரி

[டிசம்பர் இதழ்த் தொடர்ச்சி]

காளிதாஸர் மீண்டும் கூறினார்: குமாரதாசா! இதுவரை என்னுடைய விரிந்த நூல்களைப் பற்றி உன்னிடம் கூறினேன். அவைகளைத் தவிர இன்னும் பல நூல்களை நான் இயற்றியதுண்டு. நான் மறைந்த பிறகு பலர் நூல்களை இயற்றி என் பெயருடன் பரவும்படி செய்யக்கூடும். உன்னால் முடிந்தவரையில் நீ அத்தகைய முயற்சிகளைப் பயனற்றதாகச் செய்யவேண்டும். நான் எழுதிய சில நூல்களில் முக்கியமானவை சிருங்கார திலகம், புஷ்பபாண விலாஸம், விருத்தங்களை விளக்கிக் கூறும் சிருதபோதம், தேவியைப் போற்றும் சியமாலா தண்டகம் என்ற நூல்கள் என் சிறு நூல்களில் என் இதயத்தில் நான் உணர்ந்த ரச இன்பங்களையும் நான் யோக நிஷ்டையில் கண்ட தெய்வீக அனுபவங்களையும் கூறியுள்ளேன். இவைகளை நன்கு விளம்பரப் படுத்தவேண்டும்.

தேவி அருளால் எனக்கு மூன்று கால அறிவும் சர்வதேவ தேவிதர்சனமும் பரப்பிரஹ்ம சாக்ஷாத்காரமும் கிடைத்தது. "கடவுள் அருவமா உருவமா நிர்குணமா ஸகுணமா" என்று யாராவது உன்னை வினவினால் "கடவுள் அனந்த அகண்ட நித்திய சச்சிதானந்த சுரூபம் ஆனால் அவருக்கு அனேக நித்திய சத்திய சுந்தரவடிவங்களும் அனேக நித்திய சத்திய சுந்தர நாமங்களும் உண்டு என்று காளிதாஸர் என்னிடம் கூறினார் என்று நீ தைர்யமாக கூறவேண்டும்" என்று கூறினார். "கடவுளை அடைவதற்கு எந்த வழி உயர்ந்தது சிறந்தது" என்று எவராவது உன்னைக் கேட்டால் "எல்லா மார்க்கங்களும் அவரிடம் நம்மை அழைத்துச் செல்லும். அவைகளுக்குள் அங்காங்கி பாவம் அனேக சம்பிரதாயங்களின்படி வெவ்வேறாக இருக்கின்றன. ஆனால் அவைகளுக்குள் ஏற்றத்தாழ்வு கூறுவது மதியீனம். கடவுளுடன் ஐக்யமாவதுதான் பரமானந்தம். அதுதான் சம்சாரத்திலிருந்து நமக்கு விடுதலையை யளிக்கும். அதுதான் மோக்ஷம். அதுதான் வீடு. அதுதான் பேரின்ப நிலை என்று காளிதாஸர் சொன்னார் என்று தைர்யமாகக் கூறுவாயாக" என்று சொன்னார். மறுபடியும் "அதிலும் முக்கியமாக தியான யோகமும் சகஜ சமாதி நிஷ்டையும் எல்லா மார்க்கங்களில் செல்லப்பட்டவர்களுக்கும் இன்றியமையாதவை. அவைகளின் சக்தியால் கர்மயோகி தன் செயல்கள் தூய்மையாகவும் நிஷ்காமமாகவும் செய்யும்படி ஏற்படும். அவைகளின் சக்தியால் பக்தியோகம் பரபக்தியாகும். அவைகளின் சக்தியால் ஞான யோகியின் ஞானம் அகண்ட சச்சிதானந்த சாக்ஷாத்காரமாகும். இவையெல்லாம் பாரத நாட்டுக்கு ஏற்பட்ட தனிச்சிறப்புகள். ஏனையச் சிறப்புகளை மற்ற நாடுகளிலும் நாகரீகங்களிலும் காணக் கூடும். ஆனால் நம்முடைய பாரத நாட்டில்தான் யோகமும் அஹிம்சையும் பசு பூஜையும் பெண்களை

தெய்வீக ஒளியுள்ளவர்களாகக் கருதுவதும் காணப்படுகின்றன'' என்று வற்புறுத்திக் கூறினார்.

பிறகு காளிதாஸருடைய சரீரத்தில் கொஞ்சம் கொஞ்சமாகத் தளர்ச்சி அதிகமாயிற்று. உடலில் ஆயாசம் ஏற்பட்டும் மனதில் தெளிவும் முகத்தில் ஒளியும் குறையவே இல்லை. இறுதியில் அவர் கூறினார்:

“குமாரதாசா! என்னைத் தேவி அழைக்கிறாள். சர்வதேவ தேவி தர்சனம் அவளுடைய அருளால் எனக்கு ஏற்பட்டிருக்கின்றது. என் சந்திரகலாதேவி பராசக்தி பக்கத்தில் நின்று என்னைக் கூப்பிடுகின்றாள். குமாரதாசா! உனக்கு எல்லா மங்களமும் உண்டாகுக. பராசக்தி!

சதுர்புஜே சந்த்ர கலாவதம்ஸே
குசோன்னதே! குங்குமராக சோணே |
புண்ட்ரே க்ஷு பாசாங்குச புஷ்பபாண
ஹஸ்தே நமஸ்தே! ஜகதேகமாத: ||

ப்ரவர்த்ததாம் ப்ரக்ருதி ஹிதாய பார்த்திப:
ஸரஸ்வதீ ச்ருத மஹிதா மஹீயதாம்
மமாபி ச க்ஷபயது நீலலோஹித:
புனர்பவம் பரிகத சக்திராத்ம பூ:.

பிறகு காளிதாஸர் ஒன்றுமே பேசவில்லை. “ஸஸ்தாணு: ஸ்திர பக்தி யோக சுலப: நிச்ரேயஸோ ஸ்துமே'' என்று மிக மெல்ல முணுமுணுத்தார். முடிவில் “ஜகத: பிதரௌ வந்தே பார்வதீ பரமேச்வரௌ'' என்று கூறியதுபோல் உதடுகள் சத்தமின்றி அசைந்தன. அவ்வளவுதான்! மூச்சு நின்றுவிட்டது. அவருடைய ஆன்மஜோதி அகண்ட இறைவனுடைய சச்சிதானந்த ஜோதியில் கலந்து ஐக்கியமடைந்தது.

இது நான் மட்டுங் கண்ட அதிசயமல்ல. இன்னும் பல சீடர்களும் வித்வான்களும் பெரியோர்களும் அங்கே கூடியிருந்தார்கள். விக்கிரமாதித்ய அரசனும் அப்பொழுது அங்கே பிரசன்னமாகி இருந்தார். மகாகவி காளிதாசர் உயிர் நீத்துப் பொன்னுலகஞ் சென்றதில் அவருக்கு அளவற்ற துயரம். சாஸ்திரப்படிச் செய்ய வேண்டிய சடங்குகளை எல்லாம் அவர் நன்கு நடத்திவைத்தார்.

காளிதாசருடைய பெருமையை என்னைப் போன்றவர்கள் அறியமுடியுமா?

காளிதாச கிராம்சாரம்
காளிதாச சரஸ்வதீ |
சதுர்மு கோதவா சாக்ஷாத்
விதுர் நான்யேது மாத்ருசா: ||

(காளிதாசருடைய பெருமையை காளிதாசரோ! சரஸ்வதியோ நான்கு முகமுடைய பிர்மனோ அறியமுடியும். எம்போன்றவர்கள் அவருடைய பெருமையை அறிய முடியாது.)

ஆனாலும் அவர் எப்படி என்னிடம் கூறினரோ அதை அவர் கூறியபடி கூட்டாமல் குறைக்காமல் நான் கூறினேன். எனக்கும் அவருடைய அருளால் இறைவனுடைய ஜோதியில் ஐக்கியமடையும் பெரும் பேறு கிடைக்கவேண்டும். அவர் கூறிய சாகுந்தல நாடகத்தின் இறுதிச் செய்யுள் தான் எனக்குத் தாரக மந்திரம்.

ப்ரவர்த்ததாம் ப்ரகிருதி ஹிதாய பார்த்திப:
சரஸ்வதீ ச்ருத மஹிதா மஹீயதாம் |
மமாபிச க்ஷபயது நீலலோஹித:
புனர்பவம் பரிகத சக்திராத்ம பூ: ||

(அரசன் மக்கள் நலத்தை நாடவேண்டும். பெரியோர்களுடைய அறிவு எங்கும் பரவவேண்டும். அனந்த சக்தனை சுயம் பிரகாசனை பரமேச்வரன் என் வினையைத் தீர்த்து மறுபிறப்பின்றி மோக்ஷ இன்பத்தை எனக்கு அளிக்கவேண்டும்.)

(முற்றிற்று.)

கல்கத்தா சர்வகலாசாலையின் அஸுடோஷ்

பொருட்காட்சிச்சாலை

******

பல்வேறு காலங்களையும் சேர்ந்த இந்தியக் கலைப் பொருள்களைச் சேகரித்துப் பாதுகாத்து வைப்பதற்காகக் கல்கத்தா சர்வகலாசாலை பிரபல இந்தியக் கல்வித்துறையாளரான ஸர் அஸுடோஷ் முக்கர்ஜியின் பெயரில் 1937—ம் வருஷத்தில் இந்தியக் கலைநுட்பப் பொருள்களடங்கிய பொருட்காட்சிச் சாலையொன்றை ஏற்படுத்தியது. அந்தச் சேகரிப்புகளில் வங்காளக் கலைப் பொருள்களுக்கு விசேஷ முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது.

பங்கூரா, பன்கார், டாம்லக் ஆகிய விடங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட கோடரிகள் போன்ற கற்கால உபகரணங்கள் அப்பொருட்காட்சிச் சாலையில் வைக்கப்பட்டிருக்கின்றன. அப்பொருள்கள் வெகு காலத்துக்கு முற்பட்ட வங்காளக் கலாசாரச் சரித்திர வரலாற்றுக்கு ஆதாரங்களாக விளங்குகின்றன. வங்காளம், ஒரிஸ்ஸா ஆகிய விடங்களைச் சேர்ந்த கிராமிய சித்திரங்கள் மிகவும் சவிஸ்தாரமான முறையில் அங்கே சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. தற்போது அப்பொருட்காட்சிச் சாலையிலுள்ள காட்சிப் பொருள்களின் மதிப்பு 30 லட்சம் ரூபாய்க்கு அதிகமாகும்; சென்ற இருபது வருஷ காலத்தில் கல்கத்தா சர்வகலாசாலை சுமார் 30,000 ரூபாய் மதிப்புள்ள கலைப் பொருள்களை விலைக்கு வாங்கிச் சேகரித்து வைத்திருக்கிறது; களங்களில் சேகரிக்கப்பட்ட பொருள்களும் தனிப்பட்டவர்களால் கொடுக்கப்பட்ட தாரான நன்கொடைப் பொருள்களும் அங்கே ஏராளமாக இருக்கின்றன.

அப்பொருட்காட்சிச்சாலை 1938-ம் வருஷத்திலிருந்து சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஸ்தலங்களில் அகழ்வாராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. வங்காளச் சரித்திரத்தின் இருண்ட காலங்கள் பற்றிய விவரங்கள் அந்நடவடிக்கைகள் மூலம் தெரியவந்திருக்கின்றன.

சுந்தர வனத்திலிருந்து கிடைத்த ஒரு செம்புத் தகட்டில் விஷ்ணு ஒரு ரதத்தில் உட்கார்ந்திருப்பது போன்ற உருவம் செதுக்கப்பட்டிருக்கிறது. இது கி. பி. 1198-ம் வருஷத்தைச் சேர்ந்ததாகும். கி. பி. 11—வது நூற்றுண்டைச் சேர்ந்த சிவ-லோகேஸ்வரராவின் வெண்கலச் சிலையொன்றும் அங்கே வைக்கப்பட்டிருக்கிறது.

கல் சிற்ப வேலைப்பாடமைந்த பொருள்களும் விசேஷ கவனத்திற்குரியவையாகும். புத்தமதம் சம்பந்தமான காகிதக் கையெழுத்துப் பிரதிகளும் வர்ண ஓவியங்களும் அங்கே சேகரித்து வைக்கப்பட்டுள்ளன.

வழிகாட்டிப் பிரசங்கத் திட்டம் ஒன்றை அப்பொருட்காட்சிச்சாலை நடத்தி வருகிறது. கலைத்துறை ஆசிரியர்களுக்கும் கலை அபிமானிகளுக்கும் அந்தப் பிரசங்கங்கள் மிகவும் உபயோகமாய் இருந்துவருகின்றன.

கறுப்புக் கல்லில் செதுக்கப்பட்ட மிகவும் அபூர்வமான வேலைப்பாடமைந்த சுதர்சனச் சக்கரத்தை இப்படத்தில் காணலாம். விஷ்ணு கருடனின்மீது நின்று நர்த்தனம் புரியும் காட்சியை அச்சக்கரத்தின் மத்தியில் காணலாம். விஷ்ணுவை நடராஜாவாக கற்பனைசெய்து செதுக்கப்பட்டுள்ள உருவம் இது ஒன்றுதான் இருக்கிறது என்று சொல்லலாம். (சுந்தரவனம், மேற்கு வங்காளம். கி. பி. 11-வது நூற்றாண்டு)

★ வ்ருதாதிகவின் மகிமை ★

மார்கழி குருவார பூஜை

— ஏ. சரோஜா பாய் —

—★—

தன் கணவருக்குத் தெரியாமல் தன் மூத்த பிள்ளையை அழைத்து "மகள் வீட்டுக்குப் போய் தங்கள் கஷ்டத்தைச் சொல்லி ஏதாவது பணம் வாங்கிக் கொண்டு வா" என்று அனுப்பினாள். தன் கணவன் கேட்டால் பிறகு சொல்லிக் கொள்ளலாம். முன்பே சொன்னால் அவர் அனுப்ப மாட்டார். தரித்திரத்தின் கஷ்டமோ பொருக்க முடியவில்லை. தங்களை மகள் எப்படி வரவேற்கிறாள் என்பதையும் தெரிந்து கொள்ளலாம்' என்று அவள் மனதில் பட்டது.

தாயாரினால் அனுப்பப்பட்ட மகன் தமக்கையின் ஊர் போய் சேர்ந்தாள். அவளைப் பார்த்த உடன் மிக்க சந்தோஷமடைந்த சகோதரி தன் பக்கத்தில் உட்கார வைத்து தகப்பனாருடையதும் தாயாருடையதும் க்ஷேம சமாசாரங்களை விசாரித்தாள். ராஜ்ய மெல்லாம் இழந்து அவதிப்படும் தந்தையை நினைத்து அவள் உள்ளம் பாகாய் உருகியது. தன் சிறிய தாயார் அம்மனை உதைத்துத் தள்ளிய காரணத்தினால் தான் இப்படிப் பட்ட கஷ்டம் வந்தது என்று உணர்ந்து கொண்ட அவள் மிக்க வருத்தப்பட்டாள். தம்பியை 10 நாள் தன்னிடம் வைத்துக் கொண்டு பல உபசாரங்களுடன் அவனுக்கு சந்தோஷப் படுத்தினாள். தன் தாய் தகப்பன் கஷ்டப்படுவதை நினைத்துக் கொண்ட சிறுவன் தான் ஊருக்குப் போவதாகப் புறப்பட்டான். உடனே சகோதரி அவனிடம் பணம் கொடுத்தால் சிறுவன் துலைத்துவிடுவான்; அல்லது அவனை ஏமாற்றி யாராவது எடுத்து கொண்டு போய்விடுவார்கள் என்று ஒரு பெரிய பானையில் நல்ல தயிர்சாதமாக கலந்து மேலே வைத்து அடியிலெல்லாம் சவரன்கள் வைத்து "இதை மேலே பாதி சாப்பிட்டு விட்டு மீதியை நீ வீட்டுக்குக் கொண்டு போ" என்று சொல்லி அவனிடம் கொடுத்து அனுப்பினாள். கொஞ்சதூரம் நடந்து சென்ற அச்சிறுவன் நடந்து வந்த களைப்பினால் அங்கு இருந்த மூங்கில் கொம்பில் அந்தப் பானையைக் கட்டி விட்டு அதன் கீழ் படுத்துத் தூங்கிவிட்டான். மூங்கில் மரம் காலையில் கீழேயும் சாயங்காலம் மேலேயாக போய் விடும் வழக்கமல்லவா? இச்சிறுவன் எழுந்து பார்க்கும் போது சாயங்காலம் ஆய்விட்டது. மூங்கில் மரத்தில் கட்டியிருந்த பானை மேலே போய் விட்டது. எத்தனையோ அதை எடுக்க ப்ரயத்தனம் செய்து பார்த்தான். முடியவில்லை. யாரோ பையன் என்று யாரும் உதவிக்கும் வரவில்லை. இருட்டி விட்டால் வழிதெரியாது என்று பயந்த அச்சிறுவன் வீடு நோக்கி நடந்தான்.

ஊருக்குப் போன சிறுவன திரும்பவில்லையே என்று வருத்தத்துடன் எதிர் பார்த்துக் கொண்டு இருந்த தாயார் பையன் க்ஷேமமாக திரும்பி வந்த

தைப் பார்த்து சந்தோஷத்துடன் அவன் அங்கு போனதிலிருந்து நடந்த விஷயங்களைக் கேட்டு அறிந்தாள். அவனுக்கு நடந்த உபசாரங்களைக் கேட்டு மனம் குளிர்ந்தது. அவன் வரும்போது ஒன்றும் கொடுத்து அனுப்ப வில்லையே என்று குறை. கொடுத்த தயிர்சாதமும் குழந்தை சாப்பிட முடியாமல் போய்விட்டதே என்று ஏங்கினுள். தன் கணவனிடம் விஷயங்களைச் சொல்லி பானை மேலுக்குப் போய் விட்டதையும் தெரிவித்தாள். இதை எல்லாம் கேட்ட கிழவன் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டார். தன் மகள் சும்மா அனுப்பமாட்டாள். அந்தப் பானையில் பணம் வைத்திருப்பாள். அதை அனுபவிக்க அருகதையற்ற நமக்கு அது எங்கே கிடைக்கப் போகிறது என்று அவர்களிடம் ஒன்றும் பதில் சொல்லாமல் சும்மா இருந்தார். தன் பெண்ணின் பெருந் தன்மையான குணம் அவரைச் சந்தோஷத்தில் மூழ்க வைத்தது. இத்தனை கொடுமை செய்த சித்தியின் மகனையும் தன் சொந்த சகோதரன் போல் பாவித்து உபசரித்து அனுப்பிய அவள் குணத்தை மெச்சினுர். இப்படியே கொஞ்ச நாள் கழிந்தது. சிறிய தாயாருக்கு மறுபடியும் தன் பெண் வீட்டுக்கு யாரையாவது அனுப்ப வேண்டுமென்ற ஆசை பிறந்தது. தன் இரண்டாவது மகனை அழைத்து, "அப்பா! நீ அக்கா வீட்டுக்குப் போய் வா. அவள் ஏதாவது கொடுத்தால் ஜாக்கிரதையாக வாங்கிக் கொண்டுவா" என்று அனுப்பினுள்.

இவன் போய் நடந்தவற்றை எல்லாம் சொன்னுன். அதை கேட்ட அவளுக்கு மிக்க வருத்தம் ஏற்பட்டது. என்ன இவர்களுடைய துரத்ருஷ்டம் பணம் அனுப்பியும் இவர்களுக்கு சேரவில்லையே என்று வருத்தப்பட்டு இச் சிறுவனையும் 10 நாள் தன்னிடம் வைத்துக் கொண்டு ஊருக்குப் போகும் போது தன் தோட்டத்திலிருந்த ஒரு பெரிய பூஷணிகாயை கொண்டுவர சொல்லி, அதன் உள் இருப்பதெல்லாம் எடுத்துவிட்டு நிறைய பணம் அதில் வைத்து தன் தகப்பனுருக் கென்று ஒரு ஜதை பெரிய செருப்பு தைத்து அதன் உள்ளேயும் பல சவரன்களை வைத்து தைத்து, "இதை தகப்பனுருக்குக் கொடு காலில் கல் குத்தாமல் செருப்பு போட்டுக் கொள்ளட்டும்" என்று சொல்லி ஒரு பூஷணிக்காயை தாயாரிடம் பத்திரமாக சேர்க்கும்படி கொடுத்து அனுப்பினுள்.

பாதி தூரம் அந்தப் பெரிய பூஷணிக்காயை தூக்க முடியாமல் தூக்கி சென்ருன் அச் சிறுவன். வெய்யில் காலை சுட்டது. அதனுல் தகப்பனுருக்கு என்று கொடுத்த அந்த செருப்பை தன் காலில் போட்டுக்கொண்டு நடந்தான். அதே வழியில் வந்து கொண்டிருந்த அரண்மனை தோட்டத்து ஆள் ஒருவன் இவனைப் பார்த்து, "யாருடா பையன்? ஊருக்குப் புதுசாக இருக்கிருய். எங்கள் அரண்மனை தோட்டத்தை தவிர வேறெ எங்கேயும் இத்தனை பெரிய பூஷணிக்காய் காய்க்காது. அதை திருடிக் கொண்டு போகிருயா? பார்த்தால் திருடனுட்டமாகவே

இருக்கிறது. உன் காலுக்குப் பொருத்தமில்லாத பெரியசெருப்பையும் இருடி காலுக்கு மாட்டிக்கொண்டு இருக்கிருய். இவை இரண்டையும் இப்படி கொடு. இல்லாவிட்டால் அடிப்பேன்'' என்று அச் சிறுவனை மிரட்டி இரண்டும் பிடுங்கிக் கொண்டான். ''இந்த அரண்மனை ராணி தான் என் சகோதரி அவள் தான்கொடுத்தாள்'' என்று எவ்வளவோ சொல்லி பார்த்தான். செவிடன் காதில் ஊதின சங்கு மாதிரி ஒன்றும் பயனில்லாமல் போயிற்று.

கப்பலேத்தம்

பாட்டி:- அதிசயம் கேட்டயா! மேல்நாட்டிலே ஆரோக்ய வ்ருத்தின்னு காது குத்திக்க ஆரம்பிச்சுட்டாளாம்...

பேத்தி:- பின்னே...என்ன நம் நாட்டிலேதான் எல்லா வழக்கத்தையும் கப்பலேத்திடாளே. அவாளாவது கொண்டாடட்டும்.

வீட்டுக்கு வந்து அழுது கொண்டு நின்ற மகனைப் பார்த்த தாய் சமாசாரத்தை விசாரித்து அறிந்து கொண்டாள். பாவம் வயது காலத்தில் கிழவனுக்கு செருப்பாவது உபயோகப்பட்டு இருக்குமே என்று மிக்க வருந்திருள். அதிலெல்லாம் பணம் வைத்திருப்பாள் என்று அவள் மூளையில் ஏறவில்லை. பணம் அவள் கொடுத்து அனுப்பவில்லையே! எப்படி மானத்தை விட்டுக் கேட்பது என்று வருத்தப்பட்டாள். மூன்ருவதாக தன் மற்றொரு மகனை அனுப்பி வைத்தாள். அவனிடமும் அவன் தமக்கை கை தடி ஒன்றில் நிறைய பணம் வைத்து, உள்ளெல்லாம் பணம் வைத்து தைத்த ஒரு போர்வையையும் கொடுத்து இது பத்ரமாக தன் தகப்பனரிடம் சேர்க்க வேண்டும் என்ருள். அதையும் தொலைத்த சிறுவன் அழுதவாறு ஊர் வந்து சேர்ந்தான். இதைப் பார்த்த தாய் மிக வருத்தத்துடன் குளிருக்குப் போர்வையும் கைக்கு தடியும் தேவை என்று அவள் அனுப்பி இருக்கிருள். இதையும் தொலைத்து கொண்டு வந்து இச் சிறுவர்கள் எமாறுகிருர்கள். நாமே நேரில் போய் கஷ்டங்களை சொல்லிக் கொண்டால் பெண் பண உதவி செய்வாள் என்று நினைத்து தன் குழந்தைகளுடன் புறப்பட்டாள் சித்தி. அரசரான தன் கணவனை கூட வரச்சொல்லி எத்தனை தாரம் கெஞ்சியும் அவர் மறுத்து விட்டார். தன் மகளைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை ஒரு புறம் இருந்தாலும் தான் இந்த நிலையில் அவள் வீட்டுக்குப் போக நேர்ந்து விட்டதே என்ற அவமானத்தால் போகாமலே இருந்து விட்டால் நல்லது என்று அவருக்குத் தோன்றியது.

சிறிய தாயாரும் குழந்தைகளும் வருவதைப் பார்த்த ராணி (மூத்த மகள்) சந்தோஷத்துடன் எதிர்கொண்டு வரவேற்றருள். சித்தியின் நிலைமையைப் பார்த்து கண்ணீர் விட்டாள், எப்படியாவது இவர்கள் கஷ்டம் தீர வழி பண்ண வேண்டும் என்று அவள் மனம் திட்டமிட்டது. சிறிய தாயாரையும் தன் சொந்த தாயார்

போல் உபசரித்து மகிழ்வித்தாள். கொஞ்ச நாள் சென்றது. மார்கழி மாசம் பிறந்தது. அப்பெண்ணுக்கு ஒரு யோசனை தோன்றியது. 'எந்த தாயாரை மகாலக்ஷ்மியை உதைத்துத் தள்ளினாளோ... அவளுக்கே சித்தி கையினால் பூஜை செய்வித்து மன்னிப்புக் கேட்டுக் கொள்வோம். அம்பாள் தயவு பிறந்து விட்டால் ஆகாத காரியம் என்ன இருக்கிறது. வேறெந்த விதத்தில் என்ன உதவி நாம் செய்தாலும் பயனற்றுப் போய்விடும். இதுதான் சரியான வழி' என்று சித்தியைக் கூப்பிட்டு "சித்தி! நான் ஒன்று சொல்லுகிறேன், கோபித்துக் கொள்ளாதீர்கள். மார்கழி மாதத்தில் நான் பூஜித்து வந்த அந்த அம்பாளை நீங்கள் பூஜித்தால் சகல கஷ்டங்களும் பரிகாரமாகும். எனக்கு இத்தனை நல்ல இடத்தில் கல்யாணம் ஆனதும் அந்த அம்பாள் தயவுதான். மனிதர்கள் ப்ரயத்தனப்படலாமே தவிர தெய்வ பலம் இருந்தால்தான் எதுவும் நடக்கும். அந்த பூஜையில் மிகநம்பிக்கை பிறந்து இருக்கிறது. நீங்கள் தயவு செய்து இந்த தடவை என்னுடன் கூட இந்த வ்ரதத்தை அனுஷ்டித்துப் பாருங்கள். உங்களுக்கு வந்த கஷ்டமெல்லாம் தீர்ந்து விடும். நாளைக்கு வியாழக் கிழமை முதல் வாரம் ஆதலால் காலையிலிருந்து ஒன்றும் சாப்பிடாமல் பூஜையை முடித்துக்கொள்ளலாம். நான் பூஜைக்கு ஏற்பாடு செய்கிறேன்" என்று சொல்லி விட்டுப் போனாள். ஏதாவது ஒரு வழியில் தன் தரித்திரம் தீராதா என்று நினைத்த சித்தி அரை குறை மனதுடன் பூஜை செய்ய ஒப்புக்கொண்டாள். மறு நாள் காலையில் சித்தியிடம் வந்த பெண் ஏதாவது வேலை வைத்தால்தான் சித்திக்குச் சரியாக இருக்கும். இல்லா விட்டால் ஏதாவது சாப்பிட்டு விட்டால் பூஜைக்கு அருகதை யற்றவள் ஆகி வ்ரதம் அனுஷ்டிக்க முடியாமல் போய்விடும் என்பதற்காக "சித்தி! இந்த குழந்தையைப் பார்த்துக் கொண்டே, தம்பி தமக்கைகள் எல்லாம் சாப்பிடுகிறார்கள் கொஞ்சம் போய் கவனித்துக் கொள். நான் பூஜைக்கு தயாராக இருக்கிறதா, பார்த்து வருகிறேன்" என்று சொல்லி விட்டுப் போனாள்.

சாப்பாட்டு அறைக்குச் சென்ற சித்திக்கு நல்ல சாப்பாடு, வாசனை மூக்கைத் துளைத்தது. தரித்திரத்தினால் கஷ்டப்பட்டு நலிந்த சித்தி தன் வாயைக் கட்டுப்படுத்த முடியாமல் சமையல்காரனிடம் குழந்தைகளுக்குப் போடும் சாதத்தைத் தனக்கும் போடச்சொல்லிக் கேட்டுச் சாப்பிட்டாள். பெண் சொல்லி விட்டுப் போனது அவளுக்கு நினைவு வரவே இல்லை. சித்திகூட பூஜைசெய்கிறாள் என்று தடபுடலாக பூஜைக்கு ஏற்பாடு செய்துவிட்டு வந்த பெண் அன்புடன் சித்தியிடம் வந்து "வா சித்தி! எப்படி ஏற்பாடு பண்ணியிருக்கிறேன் பார். பூஜைக்கு நீ இங்கு இருப்பது எனக்கு மிக்க சந்தோஷம். உடனே எழுந்திரு பூஜைக்கு" என்று அன்புடன் அழைத்தாள். இதை கேட்ட சித்திக்கு திகில் பிடித்துக் கொண்டு விட்டது. தான் உபவாஸமாக இல்லையே சாப்பிட்டு விட்டோமே என்ன செய்வது பயந்த அவள் "குழந்தாய்! எனக்கு இன்று பூஜை

என்ற நினைவே இல்லை. நீ குழந்தைகள் சாப்பிடுவதைக் கவனித்துக் கொள் என்று சொன்னாயே? அப்பொழுது அங்கு மீந்த கொஞ்ச சாதத்தை நான் சாப்பிட்டுவிட்டேன். வ்ரதம் அனுஷ்டிக்க முடியாது. இதற்கென்ன ப்ரமாதம். வர வாரம் செய்தால் போயிற்று'' என்று அஸ்ரத்தையாகச் சொல்லிவிட்டாள். பாபம்! பெண்ணுக்கோ மனதில் ஒரே வருத்தம். என்ன அநியாயம் இப்படி நடந்துவிட்டதே. இவர்களுடைய புத்தியீனத்தினால் கிழ வயதில் தகப்பனார் கஷ்டப்பட வேண்டி இருக்கிறதே. இன்னும் இவர்களுக்கு நல்ல வேளை வரவில்லை, அதுதான் இப்படி ஆயிற்று. 'அவர்களுக்கு நல்லது செய். அவர்களையும் காப்பாற்றி சித்தியின் குற்றங்களை மன்னித்து கொள்' என்று பலவாறு அம்மனை ப்ரார்த்தித் தன் பூஜையை முடித்துக் கொண்டாள்.

இரண்டாவது வியாழக்கிழமை வந்தது. தாயாரை (சித்தியை) ஒரு உள்ளில் உட்கார வைத்து "குழந்தைகளுக்கு வேலைக்காரி தலை வருகிறாள் பார்த்துக் கொள்'' என்று சொல்லிவிட்டுப் போனாள்.

சும்மா உட்கார்ந்திருக்க முடியாத சித்தி அந்த வேலைக்காரியிடம் "என் தலைக்கும் எண்ணை கொடு தடவிக் கொள்கிறேன்'' என்று கேட்டு வாங்கி தடவிக் கொண்டாள். வரதம் அனுஷ்டிப்பவர்கள் தலைக்கு குளித்து பூஜிக்க வேண்டுமே தவிற எண்ணை தடவக் கூடாது. அதுவும் அல்லாமல் அங்கு எங்கே பார்த்தாலும் அரிசி நெல் குவியலாக கிடந்தது. அதை ஒவ்வொன்றாக நெல் எடுத்து பொழுது போகவில்லையே என்று வாயில் போட்டுக் கொண்டே இருந்தாள். இவளைக் கூப்பிட வந்த பெண் இவள் தலையில் எண்ணை தடவி வாரியிருப்பதையும், நெல் பொருக்கி சாப்பிடுவதையும் பார்த்து ஒரே கோபம் வந்து விட்டது. தன் மனதிற்குள்ளேயே கோபத்தை அடக்கிக் கொண்ட அச்சிறுமி "அம்மா! இந்தத் தடவையும் பூஜை இல்லாமல் செய்து கொண்டாயே... தலைக்கு எண்ணையும் பூஜைக்கு முன் சாப்பிடுவதும் ஆகாதே...என்ன செய்வது'' என்று வருத்தப் பட்டுக் கொண்டாள். அவள் மனம் ஒன்றும் செய்யத் தெரியாமல் தவித்தது. அன்றிலிருந்து இதற்கு ஏதாவது வழி செய்து சித்தி கையினால் பூஜை செய்வித்து அந்த அம்மனிடம் மன்னிப்புக் கோரும்படி செய்ய வேண்டுமென்று இரவு பகலாக யோசித்தாள். கடைசியாக அவள் மனம் ஒரு முடிவுக்கு வந்தது.

3-வது வியாழக்கிழமை வந்தது. இவள் தன் மனதில் திட்டமிட்டபடி ஒரு சூழ்ச்சி செய்ய வேண்டுமென்று தீர்மானித்து தன் நகைகளை எல்லாம் கழட்டி ஒரு மூட்டையாகக் கட்டி தன் தாயாரிடம் கொடுத்து, "சித்தி! பத்திரமாக பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று சொல்லி அவள் பக்கத்தில் அதை வைத்துவிட்டு சித்தி கொஞ்சம் அஜாக்கிரதையாக இருந்த சமயம் பார்த்து அதை எடுத்துக்கொண்டு போய் மறைத்து வைத்து விட்டாள். எங்கோ பராக்கு பார்த்துக்கொண்டிருந்த சித்தி நகைகள் காணாததைக் கண்டு நடுங்கி செய்வதறியாது திகைத்தாள். (தொடரும்)

குளிர்ந்த நெஞ்சம்

வை. மு. கோ.

115-வது நாவல்

4

குழப்பத்தில் குதூகலம்

‘ஆண்டவனின் செயலையும் அவன் செய்யும் மாயா ஜாலங்களின் தத்துவத்தையும் யாராவது அறிய முடிகிறதா? அதுதானில்லை. பகவானின் செயலில் உள்ள முக்கிய மர்மம், மக்களின் மனத்தில் பலவித உணர்ச்சிகளை உண்டாக்கும் சம்பவங்களைக் காட்டி அவர்களை வியப்புக்கடலாடச் செய்து விட்டுத் தான் வேடிக்கை பார்ப்பதுதான் போலும். என்ன ஆச்சரியம்!’ என்று ராதாபாயின் மனக்கடலில் எண்ணங்களாகிய அலைகள் சுருண்டு சுருண்டு எழும் வேகத்தில் டெலிபோன் ரிஸீவரைக் கீழே வைத்து விட்டு திக்பிரமை பிடித்ததுபோல் உட்கார்ந்துவிட்டாள்.

சில நிமிஷங்களைக் காலம் கடத்திக்கொண்டு விட்டதை கடியாரம் அடித்த மணியின் ஒலியால் ராதாபாய் உணர்ந்தாள். சனியன் பிடித்த வக்கீல் எதற்காக இப்படி ப்ராணனை வாங்கவேண்டும் என்று எறிச்சலாக இருந்த வேகத்தில் “அம்மா! இங்கு வா!” என்று சற்று அழுத்தமான குரலில் கூப்பிட்டாள்.

இம்மாதிரி ஏதோ சில சமயங்களில் தான் ராதாபாய் கூப்பிடும் வழக்கத்தையறிந்த கமலாம்பாள் உள்ளுக்குள் சற்று உதைப்புடன் வந்து “என்ன ராதா?”....என்றாள்.

ராதா: அம்மா! நான் கேட்கும் கேள்விகளுக்கு நீ கண்டிப்பாய் உண்மையைக் கூறவேண்டும். மழுப்பினால் நான் ஒப்புக்கொள்ள மாட்டேன்....அந்த வக்கீல் செல்வநாதன் டெலிபோன் செய்வதும், தனித்துப் பேசவேண்டும் என்று கேட்பதும் எனக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. அந்த மனிதனுக்கும் எனக்கும் என்ன ஸம்பந்தம். அவன் தொழில் வேறு....என் தொழில் வேறு. அவன் எதற்காக இப்படிச் செய்கிறான்? தவிர....நான் இல்லாத சமயத்தில்

உன்னிடம் வந்து பேசுகிறுனு? அவன் எதற்காக இப்படி அலேகிருன். அவனுடைய இந்த அசட்டுச் செய்கையைக் கண்ட ஆஸ்பத்ரியில் உள்ள என் ஸக டாக்டர்கள் பரிகாஸ மாய்ப் பேசுகிருர்கள். அவன் யார்? அதை நீ ஒளிக்காமல் மறைக்காமல் சொல்லியே ஆகவேண்டும்.

இம்மாதிரி ஒரு கேள்வியை ராதா கேட்பாள் என்று கமலம்மாள் கனவுகூடக் காணவில்லேயாதலால் அவளே ஒருமுழ உயரம் தூக்கி வாரிப்போட்டது என்ருல் மிகையா காது. ராதாவின் கரகரப்பான குரலில் எழுந்த வார்த் தைகளுக்கு உருதுணேயாக அவள் கண்களில் கோபமும் வெறுப்பும் பளிச்சிட்டு ப்ரகாசித்தது. உடனே பதில் சொல்லவேண்டிய கமலம் பேசாமடந்தைபோல் சற்றுத் தயங்கி நின்று, பின் "ராதா! அந்த வக்கீலே உனக்கு நன் ருகத் தெரியாதது உண்மைதான். அவரைப் பற்றி நீ கொண்டுள்ள அபிப்ராயங்கள் சற்றும் பொருந்தாது. அவர் மிகவும் கண்ணியமான குடும்பத்தைச் சேர்ந்தவர்...

ராதா: அம்மா! குருக்கே பேசுவதற்கு மன்னிக்கவும். மகா கண்ணியமான குடும்பத்தில் பிறந்த பெருமையை நீதான் மெச்சவேண்டும். இதற்கு உதாரணம் எதைச் சொல்லலாம் என்ருல், நல்ல உயர்ந்த கிச்சிலிச்சம்பா விதைகளே விதைத்துள்ள கழனியில் சம்பா நெல் கதிரைத் தாங்கிய உத்தமமான பயிரும் செழிக்கின்றது. அதன் கூடவே உதவாக்கரைப் புல் பூண்டு முதலிய குப்பைகளும் முளேக்கின்றன. உயர்ந்த நெல் கதிருடன் முளேத்த தாயிற்றே என்று அவைகளே விவாசாயிகள் வைத்து வளர்க்கிருர்களா? உடனே கிளேகளேக் களேந்து எரிந்து விட்டு நல்ல கதிரை வளர்க்கிருர்கள். அதுபோலத்தா னம்மா உன் செல்வநாதப் பெரியவரின் பவிஷு...

என்று ஆவேசத்துடன் ராதாபாய் சொல்வதற்குப் பதில் சொல்லமுடியாமல் கமலம் திகைத்தாள். மேலும் ராதாபாய் தொடர்ந்து "அம்மா! அந்த அயோக்யன் இங்கு வந்து போவதுண்டா? உன்னிடம் தனிமையில் பேசிய துண்டா? உனக்கும் அவனுக்கும் என்ன ஸம்பந்தம். முதலில் அதை எனக்குச் சொல்லு"....என்று கர்ஜித்தாள்.

சற்று நடுங்கியவாறே கமலம்மாள் "ராதா!....நீ சற்று பொறுமையுடன் கேட்டால் நான் சொல்லமுடியும். அவ ரைப்பற்றி நீ எந்தக் காரணத்தைக்கொண்டு இப்படிக் கடினமாகப் பேசுகிருய் என்பது எனக்கே புரியவில்லே. அந்த மனிதனுக்கும் எனக்கும் என்றுமே ஒரு தனி ரகஸிய மான ஸம்மந்தமும் இல்லே. அவர் உன் பிதாவின் ஆப்த

நண்பரின் மகன். பரம்பரையாகப் பெரியமனிதர்கள். உன்னை உன் பிதா ஆதிமுதல்'.....

''போதும்! நிறுத்தம்மா....நிறுத்து! ஆதிமுதல் என்னை என் பிதா அந்த மகானுபாவனுக்குத் திருமணம் முடிக்க வேண்டுமென்று கூறியவாறு உயிரையே விட்டுவிட்டார்.... அதைத் தர்ம பத்தினியான நீ நிறைவேற்றக் கங்கணம் கட்டிக்கொண்டு பேசுகிறாய்! இல்லையா? அவனிடம் நீ ஏதாவது கூறிவைத்திருக்கிறாயா? உடனே சொல்லு''...என்று படபடத்த ஆத்திரத்துடன் கேட்டாள் ராதாபாய்.

கமலம்மாள் சற்று சாவதானமாகப் பேசத் தொடங்கி ''ராதா! சென்ற மாதம் அவருடைய தாயாரும் சகோதரியும் என்னைக் கோயிலில் பார்த்துப் பழய சினேகிதத்தை எல்லாம் விரிவாகப் பேசி உன் பிதா சொல்லி வந்த வார்த்தையை நினைப்பூட்டி அம்மன் ஸன்னிதியில் கேட்டார்கள். இதோபார் ராதா! எனக்கோ வயதாகிவிட்டது. உன் புகழும் திறமையும் கைராசியும் மேன்மேலும் உயர்ந்துபோவதைக் கண்டு மட்டும் பூரித்துவிட்டு ஒண்டிக் கட்டைவாழ்க்கையைப் பார்த்து பெருமூச்சுவிட என் மனம் துணியவில்லை. அதை நினைத்து நினைத்து நான் பரிதவிக்கிறேன். அதனால் தெய்வ சம்மதமிருந்து கட்டாயம் நடக்க வேண்டும்என்று நான் சொன்னது உண்மைதான். என்னுள்ளத்தின் தத்துவத்தை நீ உணர வேண்டாமா?''

''அம்மா! வெகு வெகு நன்றாக உணர்ந்திருக்கிறேன். நான் சின்னஞ்சிறு பாப்பாவல்ல. எந்தக்காலத்தில் என் பிதா என்ன சொன்னாரோ அதற்கு இந்தக்காலத்தில் கட்டுப்பட முடியாது. விவாகம் என்பதைச் சிறு பிராயத்தில் ஆதிகாலத்தில் செய்ததுபோல் செய்தால் அது மிக மிக உத்தமமான காரியந்தான். ஆனால் வயது வந்த பிறகு ஒருவருடைய யோக்கியதையை மற்றவர்களறிந்த பிறகு பழய பந்தத்தில் காலைவிட்டு விலங்கை மாட்டிக்கொள்ள முடியாது. ஜாக்கிரதை! இனி அந்த மனிதனின் யோக்யதையை நீ கேட்டால் நீயே வெறுப்பாய். என் மனத்தை இனி இப்படி நோகச்செய்யாதே. அவன் பெரிய அயோக்யன் என்பதை மட்டும் கண்டிப்பாய்க் கூறுவேன். நீ நம்பவில்லை என்றால் கையும் மெய்யுமாகக் காட்டிவிடுகிறேன். இனி அவன் எனக்குப் போன் செய்தால் கட்டாயம் ஒரு முக்யமான டாக்டரை வற்புறுத்துவதாக போலீஸில் கம்ளைண்டு கொடுத்துவிடுவேன். இனி வீட்டு வழி அவன் ஏராதவாறு பார்த்துக்கொள்ளு''....என்று கண்டிப்பாகக் கூறிவிட்டு உடனே அங்கு நிற்காமல் சடக்கென்று போய் விட்டாள்.

கமலம்மாளின் குழப்பமோ பின்னும் அதிகரித்து விட்டது. காலையில் வேலைக்காரி சொல்லிய அதிர்ச்சிகரமான விஷயமே கண் முன்பு தோன்றியது. 'வேறு யாருடனாவது நட்பு வைத்துக்கொண்டு இப்படி இந்த மகத்தான இடத்தை த்ருணமாகத் தூக்கிக் கவிழ்த்துப் பேசுகிறாளோ! என்கிற ஒரு சிறு சந்தேகம் மனத்தில் ஆழமாகப் பதிந்து வேலை செய்தது. தான் எப்படியாவது இன்று கோயிலுக்குப் போகாமல் மறைந்திருந்து இந்த ரகஸியத்தைக் கண்டு பிடித்தே ஆகவேண்டும்' என்று தனக்குள் முடிவு செய்தாள்.

ராதாபாயிக்கு மட்டும் மனது எதனாலோ சமாதானமே அடையாமல் குழம்பியதால் கடமைக்காகச் செய்ய வேண்டிய காரியங்களை ஒருவாறு செய்துவிட்டுச் சாப்பிடவும் தோன்றாமல் தன் தனியறையில் சென்று படுத்தாள். 'இன்று காலையில் வந்த மனுஷி யாராக இருக்கும். அவளைப்பற்றி அம்மா சொல்லிய வார்த்தைகள் பூராவும் சுத்தப் பொய் என்று தோன்றுகிறதேயன்றி உண்மை என்று நம்பமுடியவில்லையே! ஒரு வேளை இந்த செல்வநாதனின் சொந்தக்காரியாக இருக்குமோ! அதனால்தான் அம்மா மூடி மறைத்து ஏதோ உளறுகிறாளோ! இதென்ன சோதனை! அயோக்யப்பயலுக்கு என்றோ வாக்குக் கொடுத்தாளாம். அதை இன்று நிறைவேற்ற வேண்டுமாமே! போதும்! போதும்! நிம்மதியான வாழ்க்கையை நிர்மூலமாக்கிவிடும் ஒரு பயங்கரப் புயலேயன்றி அவனை மணப்பது சாந்திக்கும் சந்தோஷத்திற்கு மல்ல என்பதை ஏன் என் தாயார் அறியக்கூடவில்லை. எதைப் பார்த்தாலும் மர்மமாயும் ரகஸியமாயுமே இருக்கிறதே' என்று ராதா பாய்க்கு குழம்பிப்போய் சரீரமே இந்தக் கவலையினால் துவண்டு சோர்வடைந்துவிட்டது.

மனக்குழப்பமோ, சோர்வோ உண்டாகும் ஸமயங்களில் ராதாபாய் அதையொரு சிறிது மறப்பதற்கு ஸரஸ்வதியின் அம்ஸமாகிய வீணையுடன் இழைந்து ஆனந்தமாக வாசித்துத் தன்னுடைய சூடான நெஞ்சத்தைக் குளிர்ந்த நெஞ்சமாக நெகிழச்செய்வாள். தொழில் முறையில் எத்தனை ஆர்வம்! ப்ரபலம்! திறமை! முதலியன இருக்கிறதோ அதேபோல் இசைக்கடலில் நுழைந்து கான அமுதத்தை உண்டு பிறருக்கும் உண்பித்துப் பூரிப்பதில் அவளுக்கு அலாதி ப்ரீதி உண்டு. வீணையைத் தனக்குச் சாந்தியளிக்கும் கலைத் தெய்வமாக மதித்துப் பூஜிப்பதில் வெகு ச்ரத்தையுள்ளவள். ப்ரதிதினமும் இரவு படுக்கும் முன்பு வீணை வாசித்துத் தானும் கூடவே பாடாமல் படுக்க மாட்டாள்.

பாடுவதில் பலர் தேர்ச்சி பெற்றிருக்கலாம். ஆனல் தான் பாடும் பாட்டின் கருத்தையும் நன்ருக அறிந்து அனுபவித்து இசையாகிய தேனுடன் கானக் கனியைச் சேர்த்து ஆனந்திக்கும் ப்ரக்ருதிகள் மிக மிகக் குறைவு என்ருல் மிகையாகாது. அம்முறையில் ராதாபாய் முதல் ஸ்தானம் பெற்ற பெருமையில் எல்லைக்கப்பால் நிற்பவள் என்ருல் பொருந்தும். இசையில் இனிய பொருளை யறியவேண்டு மென்கிற நோக்கத்துடன் அவள் பல பாஷைகளையும் பயிலவில்லை. தன்னிடம் வரும் பலதரப்பட்ட நோயாளிகளிடம் நன்ருகப் பேசிப்பழக பல பாஷைகளும் கற்ருல் நலம் என்கிற நோக்கத்துடன் கற்ற கல்வியின் ஸாரம் நோயாளிகளிடம் மட்டும் பலனைக் கொடுக்காமல் இசையமுதின் உள்பொருளை அப்படியே அறிந்து பூரிக்கும் மகத்தான ஸாதனையையுமளித்துவிட்டதை யறிந்து அவள் உள்ளமே பூரிக்கும். இசைவெள்ளத்தில் நீந்தும்போது அத்தகைய சிறந்த ஸாகித்யத்தை யளித்த கர்த்தாக்கள் மீது எண்ணம் பாய்ந்து அந்த ஜனக்கூட்டங்களை மனதார வணங்கிப் போற்றுவாள்.

இன்றும் கலங்கித் தவிக்கும் நெஞ்சிற்கு வழக்கப்படி சாந்தியையளிக்க வீணையின் கம்பிகளோடு தனது மெல்லிய இனிய சாரீரத்தை இழையோட விட்டுப் பாடவாரம்பித்தாள். என்ன காரணத்தின் விபரீதமோ! என்னக்ரகசாரமோ தெரியவில்லை. அந்த அத்புத கானத்தில் மனம் நாடவில்லை. வீணையை வாசிக்க விரல்கள் சோர்வுற்று சாயத் தொடங்கியது. நாத மின்ஸாரத்தில் தன்னை மறக்கச் செய்யும் வீணையிலும் மனம் நாடாதது அவள் உள்ளம் அறியாமலில்லை. இத்தகைய புதிய மாறுதல் இன்னும் அதிர்ச்சியைக் கொடுத்ததே யன்றி ஆருதலை யளிக்காததால் அதையும் விட்டுவிட்டு எழுந்து கட்டிலில் சாய்ந்தாள்.

சனியன்பிடித்த டெலிபோன் மணியும், அந்த அயோக்யனின் குரலும் கேட்டு அவளைத் திடும் திடும் என்று தூக்கிப்போடுகிறதே யன்றி அந்தப் பயங்கரத்தை அறவே மறக்கமுடியவில்லை. கண்களை மூடியவாறு படுத்திருந்தாள். அச்சமயம் இவள் மனத் தாங்கலைப் பின்னும் கிளருவதுபோல் டெலிபோன் மணி அலறியதும் படுக்கையுடன் ஒருமுழம் தூக்கி வாரிப்போட்டது. ‘மறுபடியும் அந்த உதவாக்கரை `மனிதன்தான் கூப்பிடுகிருனே.... பேசாமலிருந்துவிடுவோமா....சேச்சே! யாராவது நோயாளிகளாயிருந்தால்?”....குழப்பத்துடன் சற்று பயந்தவாறு ரிஸீவரை எடுத்தாள். “ஹலோ!.... யாரு.. ஸீதாம்மா!...ஓ நமஸ்காரம்மா....என்ன! சுந்தரிக்கு ப்ரஸவவேதனையா?... இதோ வருகிறேன். பயப்படாதீர்கள். நல்ல போரனே

பேத்தியோ....ஜாம்ஜாம்மென்று சீக்கிரத்தில் கிடைத்து விடும்! வருத்தப்படவேண்டாம்"...

என்று கூறிவிட்டு "அம்மா! நான் கேஸுக்குப் போய்வருகிறேன்" என்று சொல்லியவாறு சென்றாள். தொழில் முறையில் ஒரு பரபரப்பும் சிறிது மனமாறுதலும் உண்டாகியது. டாக்டர்களின் தொழிலில் ப்ரதிதினமும் பல குழந்தைகளை உலகிற்குப் புதிதாக அறிமுகம் செய்வதில் உலகத்தில் உள்ள பல்வேறு உணர்ச்சிகளை அநுபவக் களஞ்சியங்களை—மனிதர்களின் மனோபாவங்களை—உணர்ச்சிகளை அவ்வப்போது நன்றாக அறியும் தனி வாய்ப்பு உண்டாவதால் அவைகளால் டாக்டர்களுக்கு ஒரு புதுமையான உணர்ச்சி தோன்றி உலக விசித்திரங்களின் அதிசயத்தை மனக் கண்ணால் காணச் செய்கிறது.

5

சாந்திக்கு பதில் செம்மட்டியா ?

குசமசப் பேச்சும், கொக்கரிப்பும், ஏளனச் சிரிப்பும், எரிந்துவரும் பொறாமைப் புகையும், கர்வம் பிடித்த எண்ணமும், கார்ப்பண்ணியப் பார்வையும், க்ரூரநினைப்பும்....அப்பப்பா! உலகத்தில் காணாத இடம் ஒன்றுஉண்டா!என்றால் அதுதானில்லை. சிறிய குடிசை வீடு முதல் பெரிய ராஜா அரண்மனை வரையில் மேல் குறித்த விஷக் கிருமிகள் காற்றுடன் கலந்து கன குஷியாய்—சர்வ சுதந்திரமாய்ப் பரவி விடுகிற விசித்திரத்தை ஒருவராலும் தடுக்கவும் முடிவதில்லை. எப்படிப் பரவுகிறது என்பதைக் கண்டுபிடிக்கவும் முடிவதில்லை. கடவுளின் அபரிமிதமான மாயைகளில் இதுவும் ஒன்றல்லவா!

டாக்டர் ராதாபாய் தனக்குக் கிடைத்த பொருள்களையும் நர்ஸ் ப்ரேமாவிடம் ஒப்படைத்துவிட்டதற்கும், ஆயிரம் ரூபாயை அப்படியே அனாதைக் குழந்தைகளின் செலவுக்கும் கொடுத்துவிட்ட பெருந்தன்மையைப் பாராட்டிப் புகழ்ந்து உண்மையான மதிப்புடன் பேசியவர்கள் ஒரு சிலர்தான். ஆனால் அவைகளைப் பல்வேறு உருவங்களில் மாற்றித் திரித்துக் கண்ணும் மூக்கும் வைத்து இழிவாகப் பேசும் கூட்டந்தான் அதிகப்படியாக இருந்தது என்று கூறாமலேயே புரியலாம்.

அதிலும் நர்ஸ் ப்ரேமாவுக்கு அத்தனை பெரிய புடவையையும் ஜாக்கெட்டையும் கொடுத்துவிட்ட வயிற்றெறிச்சல் தான் குட்டி டாக்டர்கள், நர்ஸ்கள் முதலியவர்களின் உள்ளங்களில் பொறாமைப் பெருந்தீயாக மூண்டு ப்ரேமாவையும் டாக்டரையும் சாட்டிச் சாட்டிப் பேசச் செய்தது.

டாக்டருக்கு ப்ரேமா வலக்கை என்றும், அவள் செய்யும் சகல அக்ரமங்களையும் மூடி மறைக்க உடந்தை என்றும் ஒரு சரடு விட்டு ஏற்கெனவே பேசுவதற்கு இந்தச் சந்தர்ப்பம் மிக மிக பொருத்தமாகிவிட்டது.

பாவம்! அப்பாவிப் பெண்ணாகிய ப்ரேமா மற்றவர்களின் விஷத்தைக்கக்கும் பார்வையின் கொடுமையும்—பேச்சின் கடுமையும் அறியாது தனக்கு இத்தகைய திடும் அதிர்ஷ்டம் உண்டாகிவிட்ட சந்தோஷத்தையும், ராதாபாய் தன்னிடம் எத்தனை அன்பாயிருக்கிறாள், உயிரையே வைத்து நேசிக்கிறாள் என்கிற நல்ல மதிப்புடன் இந்தப் புடவையை ஒவ்வொருவரிடமும் காட்டி "ஸிஸ்டர்! இதை ஸ்ரீ ராதாபாய் எனக்குப் பிறந்த நாள் பரிசாகக் கொடுத்தார்கள். என்மீது அவர்களுக்கு அலாதி ஆசை" என்று தானே சொல்லியபடி காட்டினாள்.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பார்ப்பதும் உதட்டைப் பிதுக்கிச் சிரிப்பதும், "ஓ யப்பா! ப்ரேமாவுக்கு இன்று சூரியனே அதிர்ஷ்ட திசையில் உதித்துவிட்டான்! பலேப்ரேமா! ராதாபாய் தயவால் நீ டக்டராகக் கூட ஆகிவிடுவாயல்லவா!" என்று நங்குக்காட்டிச் சிரித்தபடியே சொல்லும்போதுதான் ப்ரேமாவுக்கு ஒரு சிறிது மனத்தில் சுறுக்கென்று தைத்தது. பலர் பலமாதிரியான வித்யாஸ வார்த்தைகளைக் கூறியதும் — பார்த்ததும்—சிரித்ததும்—கண்ட பிறகு ப்ரேமாவுக்குக் கண்களில் நீர் திரையிட்டு நீர் மத்தியில் அவளுடைய கருவிழிகள் நீலோத்பலம் போல் மிதந்து ப்ரகாசித்தது.

அதேசமயம் தற்செலாக வந்த பெரிய டாக்டர் மாதுரி தேவி ப்ரேமாவை அகஸ்மாத்தாகக் கண்டுவிட்டவள் தான் பெரிய டாக்டர் என்கிற கர்வம் சிறிதுமில்லாமல் நின்று "என்ன ப்ரேமா! ஏன் கண் கலங்கி நிற்கிறாய். கையில் என்ன இது....?" என்றுகேட்ட குறலின் ஒலி ப்ரேமாவைத் தட்டி விழிக்கச்செய்தது. "டாக்டர்!....நமஸ்காரம். தங்கள் விடுதிக்குக்கூட வர நினைத்தேன்! தாங்களே வந்துவிட்டீர்கள்....இதைப்பாருங்கள்....டாக்டர்! ராதாபாய் அவர்கள் எனக்குப் பிறந்தநாள் பரிசாக அளித்தார்கள். இதை நான் எல்லோருக்கும் சகஜமாகக் காட்டினேன். எல்

லோரும் என்னை ஏளனமாகப் பார்த்துக் கேலிச் சிரிப்பும் பரிகாச வார்த்தைகளும் கூறியது என் மனம் தாங்கவில்லை. அதனால் கண் கலங்கிவிட்டது" என்று வெகு குறையாய்க் கூறினாள்.

மாதுரி: ஓகோ! ராதாபாய் உனக்குப் பரிசளித்தால் அவர்களுக்கென்னவாம் கேடு வந்தது. இதோபார் ப்ரேமா! நான் உன்னுடன் உட்கார்ந்து பேசுவதைக் கூட இந்த ப்ரகஸ்பதிகள் பார்த்தால் கதை கட்டிப் பேசுவார்கள். பொறாமைத் தீயின் சூடு அவர்களையே எரித்துப் பொசுக்கட்டும். ஏதோ நீ இந்த சிறிய வயதில் நல்ல பெயர் எடுத்து நாணயமாக இருப்பதைப் பார்க்க நான் சந்தோஷப்படுகிறேன். ஒவ்வொரு நர்ஸ்கள் செய்யும் அட்டகாஸங்களை நான் கவனிக்கவில்லை என்ற எண்ணம் அவர்களுக்கு இருக்கலாம். ஆட்டிற்கு வாலை அளந்துதான் வைத்திருக்கிறான் பகவான். நீ எதற்கும் கவலைப்படாதே. ராதாபாய் ஒரு உத்தமி. நெருப்புப் போன்ற மன உறுதியும் வைர உள்ளமும் படைத்தவள். அவளுடைய சிநேகம் உனக்கு மிக்க நன்மையைத்தான் கொடுக்கும். இந்த அல்பங்கள் உன்னை அவமானப்படுத்தியதை எண்ணி நீ அவர்களிடம் வஞ்சம் வைக்காதே. உன் வழக்கப்படி குளிர்ந்த நெஞ்சத்துடன் இனிமையாகப் பழகு. தீயவர்களிடம் பகை வைத்தால் அது தீமையில் தான் முடியும். இதுதான் என் உபதேசம். உன் பிறந்த நாளன்று என்னை வந்து பாரம்மா! நான் சொல்வதை எத்தனை கண்கள் மின்மினும் பூச்சியைப்போல் பளிச்சிட்டுப் பார்க்கிறதுகள். நீயே பாரு!....என்று சொல்லிய படியே புடவை ஜாக்கெட்டை அவளிடம் கொடுத்துவிட்டுச் சென்றாள். ப்ரேமாவின் நெஞ்சை யழுத்தும் பாரம் சற்று குறைந்திருப்பதாக ஒரு நிம்மதி உண்டாகிய உடனே புள்ளிமான்போல் துள்ளி ஓடினாள். தன்னுடைய பெட்டியில் பத்திரமாகப் புடவை ரவிக்கையை வைத்துவிட்டு ஓட்டமாகச் சென்று வேலையைக் கவனிக்கத் தொடங்கினாள்.

ஸ்ரீகேஸுக்காகச் சென்ற ராதாபாய் கலங்கித் தவிக்கும் தன் மனத்திற்கு இந்த கேஸ் ஒரு சிறிதாவது சாந்தியைக் கொடுக்கும் என்பது அவள் நம்பிக்கையான அநுபவம். டாக்டரின் முகத்தைக் கண்ட உடனே அவர்கள் அடைந்த ஆனந்தமும் கும்மாளமும் சொல்லி முடியாது. ஒவ்வொருவரும் தம்தம் மனத்தைத் திறந்துகாட்டுவது போல் தோன்றியது.

'ஒரு குழந்தையைக் கண்ணால் பார்க்கப்போகிறோம் என்ற சந்தோஷமே இத்தனை உச்சத்தில் நிர்த்தனம் செய்தால் குழந்தையைப் பார்த்த பிறகு எத்தகைய கோல கலத்தை அடைந்துப் பூரிப்பார்கள்'....என்று எண்ணிய படியே ராதாபாய் உள்ளே சென்றாள்.

ஆண்டவனருளால் அரை மணிக்குள் நாதப்ரம்மம் ஒலிப்பதுபோல் குழந்தையின் குவ்வா! குவ்வா! என்ற குரல் கேட்டதும் ஒரே சலசலப்பும் பரபரப்பும் எழுந்த தோடு ஆணா? பொண்ணா! டாக்ட்டர்! என்ன குழந்தை.... என்று ஒரேமுகமாகக் குரல் எழுந்தது... இம்மாதிரி வைப வங்களை ராதாபாய் பார்த்துப் பார்த்துப் பழகியிருப்பதால் அவளுக்கு அதைப்பற்றி அதிசயமாகவே தோன்றவில்லை.

குழந்தையின் குவ்வாக் குரலமுதம் பாய்ந்த உடனே எல்லோரும் குழந்தையைப் பார்க்க அவ்விடுதி வாசற்படியி லேயே கூடிவிட்டார்கள். பின்னும் சற்று நேரத்திற்கெல் லாம் ஸ்வர்ண விக்ரகம் போன்ற குழந்தைக்கு சொக்காய் போட்டு நன்றாக அணைத்தபடி டாக்ட்டரே வாசற்படியரு கில் வைத்துக்கொண்டு நின்றுசிரித்தபடி....."அன்பும்ஆர்வ மும் ஜ்வலிக்க பரபரப்புடன் கேட்டவர்கள் குழந்தைக்கு சவரன்களைக் கொடுத்துத்தான் பார்க்கவேண்டும்" என்று தமாஷாகக் கூறினாள் ராதா.

கொல்லென்றெழுந்த சிரிப்பொலியுடன் ஸவரன்... ரூபாய்கள் கலகலப்பும் சேர்ந்து கேட்டபோது ராதா சிரித் தபடி, அடேயப்பா! அதிர்ஷ்ட மூர்த்திதான் இவன்...என் றாள். அதே சமயம் குழந்தையின் அத்தை, டாக்ட்டர்! குழந்தையின் பிதா பார்க்க வருகிறான். தயவுசெய்து சற்று இருங்கள் என்றாள்.

நல்ல டாக்கு டீக்கென்ற ஜோர் நடையுடன் குழந்தை யின் தந்தை, அவருடைய சினேகிதர் ஒருவர் சகிதம் வந் தார்கள். குழந்தையைப் பார்ப்பதைவிட கூடவந்த சினே கிதன் ராதாபாயை இமை இசைக்காமல் பார்க்கும் கோரத்தை ராதா சடக்கென்று திரும்பிப் பார்த்தாள்.... அவ்வளவுதான், அவளை ஒருமுழ உயரம் தூக்கிவாரிப் போட்டு ஒரு கலக்கு கலக்கியது. அந்த மனிதன் தான் வக் கீல் செல்வநாதன் என்று சொல்லவேண்டுமா!....அவனைக் கண்டதும் தீயை மிதித்ததுபோல் துள்ளினாள். இத்தனை நேரம் மனத்திலிருந்த நிம்மதியும் சாந்தியும் எங்கேயோ பறந்துவிட்டது. அட சனியனே! க்ரகச்சாரமே. எந்த ஒரு பீடையை மறந்து நிம்மதியை நாடிவந்தேனோ, இங்குமா அதே சனியன் வந்துசேரவேண்டும், என்ற அதிர்ச்சியுடன் முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொண்டாள்.

முற்காலத்தில் பிரஸவித்தவளை ஆண்கள் கண்ணில் மூன்று மாதகாலம் காட்டமாட்டார்கள். அதிலும் ஸ்நானம் செய்து வெளியில் வரும்வரையில் அவளைப் பெற்ற பிதா கூட அவளைப் பார்க்க விடமாட்டார்கள். அத்தனை கட்டும் காயிதாவும் உள்ளடங்கிய உயர்ந்த கருத்துடன் நடந்து வந்தது. ப்ரஸவித்தவளைக் கணவன் கண்ணில் காட்டவே மாட்டார்கள். இக்காலத்திலோ! நேர் விரோதமாய் ப்ரஸவித்த நிமிடம் முதல் பக்கத்திலேயே உட்கார்ந்து தாத்தா பாட்டிபோல் வெட்கமின்றிப் பேசுவதும் பார்ப்பவர்கள் பரிகஸிப்பதும் ஸர்வ சகஜமாகிவிட்டது.

குழந்தையையும் தாயையும் 5....அல்லது 7...மாதம் தாய் வீட்டில் வைத்து நன்ருகப் போஷித்துப் பின் புக்ககத்தில் கொண்டுவிடும்போது ப்ரஸவித்தப் பெண்ணுக்கு முதல் முதல் கணவன் வீடு சென்றபோது எத்தகைய லஜ்ஜை, கூச்சம், உண்டாகுமோ! அப்படியே இப்போதும் இருக்கும். இக்காலத்தில் லஜ்ஜை ஏது, கூச்சம் ஏது, ப்ரஸவித்த அறைக்குள் நன்ருக கைதேர்ந்த கைராசிக்காரப் பெண்கள், அதிலும் வயதான அனுபவசாலிகளைத் தவிர வேறு யாரையுமே விடமாட்டார்கள். அம்மாதிரியான கட்டு திட்டம் நடந்த காலத்திய நல்லபலன் அலாதியானப் பெருமையுடன் தானிருந்தது. இக்காலத்திய அசட்டுப் பலன் அதற்குத் தக்கபடிதான் இருக்கிறது.

ப்ரஸவித்தவள் பெரிய குரலில் கணவனிடம் பேச ஆரம்பித்ததோடல்லாமல் மற்ருெரு நாற்காலியைப் போடச்செய்து தன் கணவனையும் அவருடைய சிநேகிதரையும் தன் கட்டிலுக்கருகிலேயே உட்காரச் செய்துப் பேசுவதைக் கண்ட ராதாபாயின் மனம் மேல்குறித்தப் பழமையின் நறுமணத்தில் லயித்துப் புகழ்ந்தது. தன்னிடம் எங்கே இந்த மனிதன் பேசவாரம்பித்துவிடுவானே என்கிற பயத்தால் சடபுடவென்று மருந்துகளை எழுதிக் கொடுத்துவிட்டு மனத் தவிப்புடன் ஒரே வேகமாக வீட்டிற்குக் கிளம்பத் தொடங்கினள்.

வீட்டுக்காரர்கள் டிப்பன், காப்பி முதலிய ஏதேதோ கொண்டுவந்தார்கள். தனக்கு ஒன்றுமே வேண்டாம். அகாலத்தில் சாப்பிடும் வழக்கமில்லை என்று கூறி வெளிப்புரம் ஹாலுக்கு வந்தாள். வீட்டுக்காரம்மாள் தட்டுடன் தாம்பூலமேந்திவந்து காரில் வைத்தாள். ஹாலில் ராதாபாய் நிற்கும் இடத்திற்குச் சமீபத்திலுள்ள நாற்காலியில் இவள் சற்றும் எதிர்பாராதவிதம் செல்வநாதன் அங்கு வந்து நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு, "டாக்டர்!" என்று தானகக் கூப்பிட்ட பிறகுதான் ராதாபாய் திரும்பிப்பார்த்துத் திடுக்கிட்டாள்.

உண்மையில் அவள் உள்ளத்தில் எழுந்த வெறுப்பின் ரேகை முகத்தில் பரவி கண்களில் ப்ரகாசிக்க, "மன்னிக்க வேண்டும்"....என்றவார்த்தைகளை மட்டும் தன் உணர்ச்சிக் கனல்களை எல்லாம் உள்ளடக்கிக்கொண்டு கூறியவாறு



காரில் சடக்கென்று சென்றுவிட்டாள். அவள் மனத்தில் பொங்கிய ஆத்திரம் பூராவும் தன் தாயாரின் மீதுதான் பாய்ந்தது. அந்த அயோக்யப் பயலுக்கு ஒரு சிறிது ஆசை காட்டி அவன் மனிதர்களிடமே இவள் பேசியதனுல்தான் இவனுடைய கொழுப்பும் துணிச்சலும் எல்லை மீறிவிட்டது.

என்றோ பச்சைக் குழந்தையாயிருந்த காலத்தில் சொல்லிய வார்த்தையை இன்று பரிபாலிக்க வேண்டுமாமே! இதென்ன அனியாயம்....நல்ல ஸத்பாத்திரமாகவும் என் தொழிலுக்கு ஏற்றமுறையில் உதவிபுரியும் உத்தமனாகவும் இருந்தால்....என் மனம் விவாகத்தை விரும்பினால்—ஒரு வேளை யோசிக்கலாம். அயோக்யன். குடி கெடுக்கும் நாய்...பெண்களின் கற்பையழிக்கும் பேய்...என்பதை யறிந்து இந்த ராஸ்கலிடம் பேசுவதா!....சீச்சீ! என்ன விபரீத காலத்திற்கோ இத்தகையத் துன்பங்கள் வந்து காலைச் சுற்றுகிறது. என்று தனக்குள் எண்ணியபடியே வீட்டிற்கு வந்தாள்.

எந்த ஒரு கேஸுக்குச் சென்றுவந்தாலும் ராதாபாய் தன் தாயாரிடம் அங்கு தான் கண்ட அதிசயங்களைக் கூறுவதும் தாம்பூலத் தட்டைத் தாயாரிடம் கொடுப்பதும் வழக்கம். இன்று அந்த செய்கைக்கு ராதாபாயின் மனம் இடங்தராததால் தாம்பூலத் தட்டை மேஜைமீது தடாரென்று வைத்துவிட்டு குளித்து சுத்தமாகிப்பின் சோபாவில் சாய்ந்தாள்.

கமலம்மாளுக்கும் இவளுடைய செய்கை வியப்பாகவே இருந்தது. எனினும் தான் வழக்கப்படி...."என்னம்மா! எல்லாம் மங்களகரமாக — சுகமாக — முடிந்ததா! என்ன குழந்தை பிறந்தது". என்று தானாக வலியக் கேட்டாள். "ஆமாம் சகலமும் அவர்களுக்கு மங்களகரமாகத்தான் முடிந்தது. ஆண் குழந்தை பிறந்து ஆனந்தமும் கூடவே பிறந்துவிட்டது. அதே இடத்தில் எனக்கு மகத்தான சோதனை...வேதனை .... சாதனை ... முதலிய துன்பங்களும் எட்டிப்பார்த்து எக்காளமிட்டுக் கைகொட்டிச் சிரித்துக் கும்மாளமடித்து விட்டது. இத்தனைக்கும் காரணம் உன்னுடைய முட்டாள் தனந்தான் என்பதை மறுக்கவே முடியாது"........

"என்னம்மா நீ சொல்வது ஒன்றுமே எனக்குப் புரியவில்லையே! என் முட்டாள் தனமாவது....துன்பங்கள் துரத்தியதாவது....விளங்கச் சொல்லேன்...."என்று கமலம்மாள் இடைமறித்துக் கேட்டாள்.

ராதா: ஆமாம்! உனக்கெப்படி புரியும். உலக விவகாரங்களறியாத நீ ஒரு அயோக்யப் பயலுக்கு வாக்குக் கொடுத்து வினையை வளரச் செய்வதற்குப் புரியுமேயன்றி நன்மைக்கு இடங்கொடுத்துப் பேசத் தெரியுமா!.... அம்மா! சத்யமாகச் சொல்லு...இப்போது நான் கேஸ் பார்க்கப் போயிருந்த இடத்திற்கு அந்த துஷ்ட செல்வநாதனை நீ தானே அனுப்பினாய் என்று சீறினாள். கமலம்மாள் செயலற்று நின்றுவிட்டாள்....

தொடர்பு கொண்டிருந்தன என்பதை அங்குள்ள புத்தர் கால சிற்பங்களும் கலைப் பொருள்களும் எடுத்துக்காட்டுகின்றன.

மதுராவிலிருந்து கொண்டுவரப்பட்ட பிச்சுபாலா போதி சத்துவரின் பிரம்மாண்டமான சிலை அப்பொருட்காட்சிசாலையின் மத்திய மண்டபத்தை அலங்கரித்து நிற்கிறது. இந்தச் சிலை குஷானர் காலத்தில் உருவாக்கப்பட்டதாகும்.

மான் பூங்காவில் புத்தர் தர்மச் சக்கரத்தைச் சுழற்றும் காட்சியை அங்கு வைக்கப்பட்டுள்ள ஒரு கல் சிற்பத்தில் காணலாம். இது குப்தர் காலத்தைச் சேர்ந்ததாகும்.

இவைபோன்று புத்தரின் பெருமைகளை எடுத்துக்காட்டுகிற எண்ணற்ற கலைநுட்பப் பொருள்கள் இடம் பெற்றிருக்கின்றன. புத்த மதத்தைப்பற்றிய ஆராய்ச்சியை மேற்கொள்கிறவர்களுக்கு அப்பொருட்காட்சிசாலை ஒரு அரிய கலைப் பொக்கிஷமாக விளங்குகிறது.

ஜம்பாலா, வஸுதாரா ஆகியோரின் வரலாற்றைச் சித்திரித்துக் காட்டுகிற ஒரு சிற்பப் பகுதியை இப்படத்தில் காணலாம்.

183228

பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்
அருணா
கர்ப்பாசயரோக நிவாரணி
ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட், மதராஸ் 17

AYURVEDASRAMAM (PRIVATE) LTD.
MADRAS-17.

வை. மு. கோ. நாவல்கள்

ரூ. 4.

சாந்தியின் சிகரம்

ரூ. 3.

வைதேகி (2 பாகம்)
நிர்மலநீரோடை

ரூ. 2-50

மலர்ந்த இதயம்
வானக்குயில்
மதுரகீதம்

ரூ. 2.

அனாதைப்பெண்
கருணாலயம்
வாத்ஸல்யம்
அமுதமொழி
தெய்வீக ஒளி
பாதாஞ்சலி
புனிதவனம்
இணைக் குன்று
ஜீவநாடி
அப்பதியும் ராஜாராம்
[முதல் பாகம்]

ரூ. 1-75

கலாநிலயம்
சிலாசாஸனம்
அமைதியின் அஸ்திவாரம்
கடமையின் எல்லை

ரூ. 1-50

பவித்திரப் பதுமை
ஓவியப் பரிசு
நம்பிக்கைப்பாலம்
சுதந்திரப் பறவை
மகிழ்ச்சி உதயம்

ரூ. 1-25

கோபால ரத்னம்
க்ருபாமந்திர்
புதுமைக்கோயில்
வீரவஸந்தா

ரூ. 1-13

அபராதி

ரூ. 1.

வத்ஸகுமார்
ப்ரார்த்தனை
பிரதிக்ஞை
பெண் தர்மம்
உண்மைச் சித்திரம்
தபால் விநோதம்
ஆண்டவனின் அருள்
இந்திரமோஹனா

நயாபைசா 75

பத்மமாலிகா
ப்ரேமாச்ரமம்
நியாயமழை
அருணோதயம்
மனச்சாட்சி
குலதனம்
கருணை உள்ளம்
சந்திரகலாமாலை
தென்னாட்டு கல்யாண முறைகள்

நயாபைசா 50

உருத்த இதயம்
கான கலை
தூய உள்ளம்
ஸௌபாக்யவதி
ப்ரபஞ்சலீலை
வெற்றிப்பரிசு
ரோஜா மலர்
தைரியலக்ஷ்மி

வை. மு. ஸ்ரீ.

தீபஸ்தம்பம் 4-0
உதய சூரியன் 1-25
பெண்மணிக்கனல் 1-0
இருளில் ஒளி 1-25
தியாகபலி 0-75
ஜயந்தி சித்தனைகள் 1-50
கோதாஹ்ருதயம் 0-75
ஸ்ரீஸ்துதி 0-25

வை.மு. பத்மினி

ஸ்ரீ க்ருஷ்ணார்ப்பணம்
ரூ. 1-50

பாலர் மோகினி
12 சிறு கதைகள் 1-0

சுத்தானந்த பாரதி

கார்த்தி கீர்த்தனம் 3-50

ப்ர.ப. அண்ணங்கராசார்ய ஸ்வாமி

ஸ்ரீ விஷ்ணு
ஸஹஸ்ர
நாமஉரை 1-0

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed & published by V. M. PARTHASARATHY at the JaganMohini Press, 26, Car St, Triplicane, Madras 5.